# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

அனைத்துலக தமிழ் ஊடக மையம்



Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1



இதழ் 255 | சனி, அக்டோபர் 07, 2023 | 15 பக்கங்கள்




முதல் பெண் மாவீரர் 2ம் லெப்

## மாலதி

நினைவுகளுடன்...



# சமூக ஊடகங்களின் மீதான

# ரணிலின் போர்ப் பிரகடனம்

அகிலன்





சுரேஷ் பிரேமச்சந்திரன் செவ்வி

# தனது சிங்கள முகத்தை

# ரணில் காட்டியுள்ளார்




© 2023 இலக்கு இணையம்

# கிண்ணியாவில் நில ஆக்கிரமிப்புக்கு பௌத்த துறவிகள் முயற்சி



கிண்ணியா குரங்கு பாஞ்சான் என்கின்ற பிரதேசத்தில் இராணுவ முகாம் இருந்த முஸ்லீம்களுக்கு சொந்தமான காணிக்குள் கடந்த செவ்வாய்க்கிழமை(3) முதல் இரண்டு நாட்களாக பௌத்த மதகுரு ஒருவரின் தலைமையில் ஐவர் கொண்ட குழு தொடர்ச்சியாக சென்றுள்ளது அங்கு சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

இவர்கள் மீது சந்தேகம் கொண்ட விவசாயிகளும் சமூக நிறுவனங்களும் குடியிருப்பாளர்களும் கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம். மஹ்தியின் கவனத்திற்கு இதனை கொண்டு வந்தனர்.

இக்குழுவினர் புதையல் அகழ்வதற்காகவா அல்லது ஏதேனும் அடையாளங்களை புதைப்பதற்காகவா? அல்லது ஏதேனும் மதம் சார்ந்த வணக்க தளங்களை அமைப்பதற்காகவா? வந்து

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# யாழில் ஆரம்பமாகிய மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி



யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் யாழ் மாவட்ட ரீதியில் தமிழ் மக்கள் கூட்டணியின் விளையாட்டுத்துறை நடத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி கடந்த திங்கட்கிழமை (02.10.2023) இரவு 7 மணிக்கு தாவடி காளி அம்மன் விளையாயட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

இவ் ஆரம்ப நிகழ்வில் யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், யாழ் மாவட்ட தாச்சி சங்க நிர்வாகிகள், தமிழ் மக்கள் கூட்டணியின் விளையாட்டுத்துறை

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இலங்கையில் இந்த வருடத்தில் 238 யானைகள் மரணம்



இலங்கையில் விபத்துக்கள் மற்றும் மனிதர்களின் தாக்குதல்களால் இறக்கும் யானைகளின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது. இந்த வருடத்தில் 100 இற்கு மேற்பட்ட யானைகள் கொல்லப்பட்டுளளதாக இலங்கை வன பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளபோதும், கடந்த ஜூலை மாதம் வரையிலும் 238 யானைகள் கொல்லப்பட்டுள்ளதாக அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# பிரித்தானியாவில் ஓய்வூதிய வயதை 75 ஆக உயர்த்த பரிந்துரை

பிரித்தானியாவில் பணிபுரியும் மக்களின் ஓய்வூதிய வயதெல்லையை 75 ஆக உயர்த்துவதற்கு பிரித்தானியா அரசுக்கு பிக்சர் நடவடிக்கையின் முன்னாள் ஆலோசகரும், கொன்சவேற்றிக் கட்சியின் கொடையாளருமான டேவிட் புரெஸ்ட் பரிந்துரை செய்துள்ளார்.



கடந்த திங்கட்கிழமை (2) பிரித்தானியாவின் மன்செஸ்ட்டர் பகுதியில் இடம்பெற்ற கொன்சவேட்டிவ் கட்சியின் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் அந்த பரிந்துரையை முன்வைத்துள்ளார். ஓய்வூதிய வயதை 75 ஆக உயர்த்துவதன் மூலம் பொது மக்களுக்கு செலவு செய்யப்படும் பெருமளவான நிதியை சேமிக்கலாம் என அவர் தனது பரிந்துரைக்கான காரணத்தை முன்வைத்துள்ளார்.

கடந்த 5 வருடங்களில்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# இந்தியாவில் வெள்ளப்பெருக்கு 22 படையினர் உட்பட 100 இற்கு மேற்பட்டவர்களை காணவில்லை



இந்தியாவின் வடகிழக்கு சிக்கிம் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 100இற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளதுடன், 14 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப் பட்டுள்ளனர். அந்த பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக இந்தியா தெரிவித்துள்ளது.

அங்கு பெய்துவரும் கடும் மழையை தொடர்ந்து ஆறுகளில் வெள்ளம் பெருகியதால் பல ஆறுகள் உடைப்பெடுத்துள்ளன. அதனால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அந்த மாநிலத்தின் வெவ்வெறு பகுதிகளில் 3000 இற்கு மேற்பட்ட சுற்றுலாப்பயணிகளும் சிக்குண்டுள்ளதால் அவர்களை மீட்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

மீட்பு நடைவடிக்கைக்கு இந்திய அரசு முழு உதவிகளையும் வழங்கும் என மாநில முதல்வரை தொடர்புகொண்ட இந்திய பிரதமர் நரேந்திர மோடி கடந்த புதன் கிழமை (4) தெரிவித்துள்ளார். பல இடங்களில் வெள்ளம் 15 தொடக்கம் 20 அடிகள் வரை உயர்ந்துள்ளது. அந்த பகுதியில் நிலைகொண்டிருந்த இந்திய படையினரும் 23 பேர் காணாமல் போயிருந்தனர். எனினும் பின்னர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை (5) வரையிலும் 10,000 இற்கு அதிகமான மக்கள் அந்த பகுதிகளில் இருந்து அகற்றப்பட்டு 190 இற்கு மேற்பட்ட முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஹிமாலயா பகுதியில் உள்ள இந்த மாநிலத்தில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுவதுண்டு. கடந்த வருடம் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கினால் 24 பேர் அங்கு கொல்லப் பட்டிருந்தனர்.

# இளவயதினர் புகை பிடிப்பதை முற்றாக நிறுத்த பிரித்தானியா திட்டம்

படிப்படியான திட்டங்களின் ஊடாக இளம்வயதினர் புகைப்பிடிப்பதை எதிர்வரும் 2040 ஆம் ஆண்டு முற்றாக நிறுத்துவதற்கு பிரித்தானியா அரசு திட்டமிட்டுள்ளது.

புகைப்படிப்பதற்கான அனுமதிக்கப்பட்ட வயது எல்லையை ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வயதினால் அதிகரிப்பது என பிரித்தானியா பிரதமர் ரிசி சுனாக் தனது புதிய திட்டத்தில் கடந்த புதன்கிழமை (4) அறிவித்துள்ளார். இந்த திட்டம் நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் நாளுக்கு பின்னர் பிறந்தவர்களுக்கு சிகரட்டுக்களை விற்பனை செய்வது அங்கு தற்



போது சட்டவிரோதமானது. ஆனால் இந்த வயது எல்லை ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கப் படவுள்ளது. புகைத்தல் அற்ற இளம்சமுதாயத்தை உருவாக்கப் போவதாகவும் அதன் மூலம் பல இளம்வயதினரின் உயிர்களை காப்பாற்ற போவதாகவும் சுனாக் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் புகைத்தலால் ஆண்டுதோறும் 64,000 பேர்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சிங்கப்பூரில் கார் அனுமதிப்பத்திரத்தின் விலை 106,00 அமெரிக்க டொலர்கள்

சிங்கப்பூரில் கார் வைத்திருப்பதற்கான அனுமதிப் பத்திரத்தின் விலை 106,00 அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



1990 ஆம் ஆண்டு அங்கு வாகன நெரிசல்களை குறைப்பதற்காக கார்களை வைத்திருப்பதற்கான 10 வருடத்திற்கான அனுமதிப் பத்திர நடைமுறைகளை நகரம் அறிவித்திருந்தது. இந்த அனுமதிப்பத்திரம் இருந்தால் மட்டுமே அங்கு கார்களை வைத்திருக்க முடியும்.

எத்தனை அனுமதிப்பத்திரங்களை வழங்குவது என்ற கட்டுப்பாட்டை அரசு முடிவு செய்கின்றது. அதற்கு அமைவாக அங்கு இரண்டு வாரத்திற்கு ஒரு முறை அனுமதிப்பதிர ஏலம் இடம்பெறும். அண்மையில் இடம்பெற்ற ஏலத்தில் குடும்ப உறுப்பினர்கள் பயன்படுத்தக்கூடிய காரின் அனுமதிப்பத்திர விலை 146,000 ($106,619;£87,684) சிங்கப்பூர் டெலர்களாக விற்பனை செய்யப் பட்டுள்ளது.

அங்கு அனுமதிப்பத்திரம் மற்றும் வரிகளுடன் ஒரு Toyota Camry Hybrid காரின் விலை 250,000

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இனவாதிகளின் அரசியல் அழுத்தமும், உயிர் அச்சுறுத்தலும் தமிழ் நீதிபதியை இலங்கையை விட்டு வெளியேறத் தூண்டியது.

**அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை**

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ஆர்.சரவணராஜா, இலங்கை அரச மற்றும் பௌத்த பிக்குகளின் தொடர் அழுத்தம் மற்றும் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். முல்லைத்தீவு குருந்தூர்மலை மற்றும் கொக்குத் தொடுவாய் மனித புதைகுழி வழக்குகளில் நீதியான உத்தரவை பிறப்பித்ததில் இருந்து தொடர்ச்சியான அச்சுறுத்தல்களுக்கு உள்ளான நீதிபதி, 2023-09-23 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தனது பதவி விலகலை அறிவித்த பின்னர் தனது பாதுகாப்பைத் தேடி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

நீதிபதி சரவணராஜா தனது உயிருக்கு அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக இராஜினாமா செய்வதாக நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதிகள் பெரும்பாலும் தங்கள் அரசியல் நடவடிக்கைகள், பொது அறிக்கைகள் மற்றும் நிதி நலன்களில் தங்கள் பக்கச்சார்பற்ற தன்மையையும் பக்கச்சார்பின்மையின் தோற்றத்தையும் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளனர். இந்த கட்டுப்பாடுகள் நீதித்துறையின் அதிகார வரம்பிற்கு ஏற்ப மாறுபடலாம். திரு. சரவணராஜா மிகவும் நடுநிலையான, நேர்மையான மனிதர் என்று பலராலும் பேசப்படுகின்ற ஒரு நீதிபதி ஆவார்.

ஒரு சனநாயக சாட்டில் அரசியல்வாதிகள் சட்ட அமைப்பில் செல்வாக்கு செலுத்தக்கூடாது, ஆனால் இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள நீதிபதிகள் பௌத்த பிக்குகள் மற்றும் சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து நிறைய அழுத்தங்களை அனுபவிக்கின்றனர். உதாரணமாக சிங்கள அரசியல்வாதியும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் வீரசேகர, நீதிபதி சரவணராஜாவின் நீதித்துறை தீர்ப்புகளை விமர்சித்ததுடன் அவரை ஒரு பைத்தியக்காரர் என்று பாராளுமன்னத்தில் கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

சர்வதேச சட்டங்களுக்கு அமைய நீதிபதிகள் துன்புறுத்தல், அச்சுறுத்தல்கள் அல்லது வன்முறையிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள உரித்துடையவர்கள், மேலும் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொருத்தமான நடவடிக்கைகள் அரசால் எடுக்கப்பட வேண்டும். இலங்கையில் தமிழ் நீதிபதிகளின் தீர்ப்புகளை சிங்கள அரசும், சிங்கள இனவாதிகளும் ஒருபோதும் ஏற்றுக் கொண்டதில்லை. இலங்கையில் இருவேறு சட்ட விதிகள் உள்ளன என்ற யதார்த்தத்தை இது பிரதிபலிக்கிறது, மேலும் தமிழர்களுக்கு எதிரான சிங்கள பௌத்த பிக்குகள் மற்றும் குண்டர்களின் நடவடிக்கைகள் சட்டத்திற்கு அப்பாற்பட்டவை மட்டுமல்ல இவர்கள் என்றுமே தண்டிக்கப்பட்டதுமில்லை.

சர்வதேச விதிமுறைகள் நீதித்துறையின் சுயாதீனத்திற்கு உத்தரவாதம் அளிப்பதுடன் அச்சுறுத்தல்கள், அழுத்தங்கள் அல்லது அவர்களின் பணிகளில் அரசியல் தலையீடுகளுக்கு எதிராக நீதிபதிகளின் பாதுகாப்பை உறுதி செய்கின்றன. நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாக்கவும், நீதிபதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் அரசாங்கங்களுக்கு கடமை உள்ளது. சட்டத்தின் ஆட்சியும் நீதித்துறையின் ஒருமைப்பாடும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

**இலக்கு**

## ஈழத்தமிழரின் இறைமையை ஒடுக்க கொண்டு வரப்பட்டுள்ள இருசட்டங்களையும் தடுக்க கூட்டொருங்குச் செயற்பாடு தேவை

1979ம் ஆண்டு யூலை 9ம் திகதி தற்காலிகச் சட்டமாகச் சிறிலங்கா அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட 48ம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் தமிழர் தாயகத்தில் அவர்களின் இறைமையை ஒடுக்க அரசியல் விழிப்புணர்வுள்ள இளையவர்களை கண்ட இடத்தில் சுடவும் சுட்ட இடத்தில் விசாரணையின்றி எரிக்கவும் சிறிலங்காவின் படைகளுக்கு வரம்பற்ற அதிகாரத்தை வழங்கியது. அத்துடன் அந்த ஆண்டு டிசம்பர் மாதத்துள் ஈழத்தமிழரில் அரசியல் விழிப்புணர்வாளர்களை பயங்கரவாதிகள் எனக் கொன்றழிக்க வேண்டும் என்று கால எல்லை கொடுத்து வடக்குக்கு அனுப்பப்பட்ட அக்கால ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் மருமகன் பிரிகேடியர் கொப்பேகடுவின் தலைமையிலான திட்டம், அந்த ஆணையை விடுதலைப்புலிகள் வெற்றிகரமாகக் கைப்பற்றி வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு உரிய நேரத்தில் சான்றாதாரத்துடன் தெரியப்படுத்தியதால் ஜே. ஆரால் கைவிடப்பட்டது. ஆயினும் ஈழத்தமிழர்கள் தங்களின் உயிரையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வையும் சிறிலங்காப் படைகளால் ஏற்படுத்தப்பட்ட இனங்காணக்கூடிய அச்சத்தில் இருந்து காக்க ஆயுத எதிர்ப்பை ஈழத்தமிழர்கள் வெளிப்படுத்துவதைப் பயங்கரவாதச் செயல் என நியாயப்படுத்தி அவர்களின் மேல் சிறிலங்கா கடந்த 44 ஆண்டுகளாக இனஅழிப்பை அரசியற் கொள்கையாக வெளிப்படுத்தி அரசியற் கோட்பாடாக நடைமுறைப்படுத்துவதற்கான சட்டப்பாதுகாப்பை பயங்கரவாதத் தடுப்புச் சட்டமே வழங்கி வருகிறது.

1982ம் ஆண்டு பயங்கரவாதத் தடைச்சட்டம் தற்காலிக ஏற்பாடு என்ற நிலையில் இருந்து நிலையான சட்டமாக மாற்றப்பட்ட பின்னரே 1983 யூலை ஈழத்தமிழின அழிப்பைச் சிறிலங்கா அரசாங்கம் அரசபயங்கரவாதத்தின் வெளிப்பாடாகத் தனது படைகளின் பாதுகாப்புடன் சிங்களவர்களைக் கொண்டு திட்டமிட்ட முறையில் செய்து , அவர்களின் சொத்துக்களைச் சூறையாடவும் ஊக்குவித்தது. 2015ம் ஆண்டு இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக ஐக்கிய நாடுகள் சபைக்கு வாக்குறுதியளித்த சிறிலங்கா அதனைச் செய்யாது, தற்போது இந்த 1979ம் ஆண்டின் 48ம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை, உத்தேசப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமாகப் புதிய பரிணாமம் பெறவைத்துள்ளது. முன்னையை விட படுமோசமான மனிதாபிமானத்துக்கு எதிரான சட்டமாகக் கடந்த 15ம் திகதி இந்தச் சட்டம் சிறிலங்கா வர்த்தமானியில் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சர் விஜயதாச ராசபக்சாவினால் வெளியிடப்பட்டுவிட்டது.

முன்னயை சட்டம் பயங்கரவாதம் வராது பாதுகாத்துத் தடுத்தல் என்ற கருத்தை முன்வைத்தது. ஆனால் இப்போது பயங்கரவாதம் நிரந்தரமாகி விட்டதால் அதனை எதிர்க்க வேண்டும் என்ற கருத்தைச் சட்டத்தின் பெயரிலேயே முன்வைத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்க வேண்டுமென்ற ஐக்கிய நாடுகள் சபையின் கோரிக்கையை எடுத்த எடுப்பிலேயே முறியடிக்கிறது. எனவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலையீட்டால் தடுக்கப்பட வேண்டிய ஒன்று என்பதைப் பெயரே உறுதி செய்கையில் உலகத் தமிழர்கள் இதனை தெளிவுபடுத்தி இதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் அழுத்தத்தால் நீக்குவதற்கு கூட்டொருங்குச் செயற்பாடுகளைத் தொடங்க வேண்டுமென்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

அதே நேரத்தில் இலங்கையில் ஊடகச் சுதந்திரத்தை முற்றாகச் செயலிழக்க வைக்குமளவுக்கு ஆற்றலுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டமும் முன்மொழியப்பட்டுள்ளது. இதன்வழி ஈழத்தமிழர்கள் நாளாந்தம் சிறிலங்காவால் மனித உரிமைகள் வன்முறைகளுக்கும் இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்களின் ஊடகச் சுதந்திரமும் சிறிலங்காவால் பலவிதங்களில் பாதிப்புக்குள்ளாகும் நிலை தோன்றியுள்ளது. இதன்வழி ஈழத்தமிழரின் அடிப்படை மனித உரிமைகள் மோசமாகப் பாதிப்படையும் பொழுதும் அவர்கள் இனஅழிப்புக்கும் அவர்களின் நிலம் ஆக்கிரமிப்புக்கும் உள்ளாக்கப்படும் பொழுதும் சமூக ஊடகங்கள் அவற்றை வெளிப்படுத்த இயலாது போகும். கூடவே உலக நாடுகளிலும் ஈழத்தமிழர்களின் மனித உரிமைகள் மற்றும் இனஅழிப்பு விடயங்களை முன்னெடுத்து உலக நாடுகளையும் உலக அமைப்புக்களையும் உதவக்கோரிப் பொதுக்கருத்துக்கோளங்களை ஊடகங்கள் வழி உருவாக்க முயலும் புலம்பெயர் ஈழத்தமிழர்களும் பலவிதங்களில் பாதிப்படையும் அபாயம் தோன்றியுள்ளது. இதனால் இந்த நிகழ்நிலைக் காப்புச் சட்டம் குறித்த விரிவான பார்வைகள் உலகெங்கும் வாழும் தமிழர்களால் வேகப்படுத்தப்பட்டு அனைத்துலகச் சட்டங்களின் அடிப்படையில் ஈழத்திலும் புலத்திலும் ஈழத்தமிழர்களைப் பாதுகாப்பதற்குச் சட்டக்கல்வி, அனைத்துலகச் சட்டக்கல்வி பயின்ற ஈழத்தமிழ்க்கல்விச் சமூகங்கள் இதனைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கட்டமைக்க கூட்டொருங்குச் செயற்பாடுகளை உடன் தொடங்க அனைவரும் உழைக்க வேண்டுமென்பதும் இலக்கின் வேண்டுகோளாகவுள்ளது.

இவ்வாறு ஈழத்தமிழர்களின் இறைமையை அன்றும் இன்றும் என்றும் சட்டங்களால் ஒடுக்கி அவர்கள் சனநாயக முறைகளிலும் தங்கள் தேசியப்பிரச்சினையை உலகின் முன் கொண்டு வருவதை முடக்கும் சிறிலங்காவின் இந்த மனித உரிமை மீறல்களை கொண்ட சட்டத்தை நடைமுறைப்படுத்துவதை உலகு கண்டுகொள்ளாது செய்யும் ராஜதந்திரமாகத் தனது கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து உலகநாடுகளையும் உலக அமைப்புக்களையும் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையில் தலையிடாதவாறு திசை திருப்புகின்றது. அதே நேரத்தில் தொடர்ந்தும் ஈழத்தமிழருக்கு இனம்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி அவர்களின் அரசியல் பணிவைப் பெற முயல்கின்றது. இதற்கு நல்ல உதாரணமே, முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி சீ சரவணராஜா அவர்கள் சிறிலங்காவின் சட்டமா அதிபராலேயே அளித்த தீர்ப்பைப் பிக்குகளுக்கும் இராணுவத்துக்கும் அவர்கள் நிலையான நில ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்க இயலாதவாறு மாற்றி எழுதவைக்க எடுத்த அச்சுறுத்தல் முயற்சிகளும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தால் இராணுவத்தில் இருந்தபொழுது யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர் என்று சந்தேகிக்கப்படும் இன்றையச் சிறிலங்காப் பாராளுமன்ற நாட்டின தேசியப் பாதுகாப்புக்குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகராவால் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் பேசப்பட்ட அச்சப்படுத்தல் பேச்சுக்களும், சிறிலங்காப் புலனாய்வுத்துறையினரின் உயிரச்ச விசாரணைகளுமே அவரை இன்னொரு நாட்டுக்குச் சென்று அரசியல் புகலிடம் கோரவைத்துள்ளது.

இந்நிலையிலேயே சட்டத்தின் ஆட்சி சிறிலங்காவில் இல்லை என்ற நிலையிலும் உலகநாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் சிறிலங்காவுக்கு அளிக்கும் மனித உரிமைகள் குறித்த நிபந்தனையற்ற நிதி உதவிகள் இன்னும் இன்னும் மனிதஉரிமைகள் வன்முறைகளை அதிகரிக்கவே செய்யுமென தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரக்குமார் பொன்னம்பலம் அவர்கள் இவ்வாரத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் உலகுக்கு எடுத்துரைத்துள்ளார். இந்த உண்மையை உலகத்தமிழர்கள் தங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் பிரதமர்களுக்குக் கூட்டொருங்குச் செயற்பாட்டின் மூலம் வலியுறுத்தி சிறிலங்காவுக்கு நிதி வழங்குவதற்கு மனித உரிமையைப் பேணலை நிபந்தனையாக்குவிக்க வேண்டுமென்பதே இலக்கின் இவ்வார மற்றொரு வேண்டுகோளாகவுள்ளது.

**ஆசிரியர்**

# சமூக ஊடகங்களின் மீதான



# ரணிலின் போர்ப் பிரகடனம்

சமூக ஊடகங்களைக் கண்டு மட்டுமல்ல, ஊடகங்களைக் கண்டே பதற்றப்படும் நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார் என்பது ஜேர்மனியின் டோச்சு வேலா (DW) தொலைக்காட்சிக்கு அவர் அளித்த நேர்காணல் உறுதிப்படுத்தியிருக்கின்றது. ஊடகங்களின் கேள்விகள், சமூக ஊடகங்களில் முன்வைக்கப்படும் விமர்சனங்களை சகித்துக்கொள்ள முடியாத ஒரு நிலையில்தான் ஜனாதிபதி இப்போது இருக்கின்றார்.

"சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது அவசியம்" என்று ஜேர்மனியிலிருந்து கொழும்பு திரும்பிய பின்னர் ஜனாதிபதி மீண்டும் ஒரு தடவை உறுதிபடக் கூறியிருக்கின்றார். "சமூகத்திற்கும், நாட்டிற்கும் இது கட்டுப்படுத்த முடியாத அச்சுறுத்தலாக உருவாகியிருக்கிறது" என்றும் அவர் சமூக ஊடகங்களை கடுமையாகச் சாடியிருக்கின்றார். எதற்காக இந்தச் சாடல் என்றால், "அவை அரசுக்குக் குடைசல் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அதனால்தான் ஜனாதிபதி சீற்றமாக இருக்கின்றார்" என்பதுதான் அதற்கான பதில்.



பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய் கிழமை "நிகழ்நிலை காப்புச் சட்ட வரைபு" என்ற பெயரில் முன்வைக்கப்பட்டுள்ள வரைபு கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதை இலக்காகக் கொண்டதாகவே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியிலேயே ஜனாதிபதியின் சமூக ஊடகங்களுக்கு எதிரான போர்ப் பிரகடனமும் வெளிவந்திருக்கின்றது. சமூக ஊடகங்கள் இப்போது ஒரு தற்காப்பு நிலைக்குச் சென்றுள்ளன.

சிரேஷ்ட ஊடகவியலாளர் எட்மண்ட் ரணசிங்கவின் நூலான 'எட்மண்ட் பத்தரவிப்லவய' (எட்மண்டின் செய்தித்தாள் புரட்சி) வெளியீட்டு விழா அதே செவ்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. அதன்போதுதான் சமூக ஊடகங்கள் குறித்த இந்த எச்சரிக்கையை ஜனாதிபதி வெளியிட்டார். அதாவது, முன்னணிப் பத்திரிகை ஆசிரியர் ஒருவரின் நூல் வெளியீட்டில் வைத்துத்தான் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது குறித்து ரணில் அறிவித்திருக்கின்றார்.

"சமூக ஊடகங்கள் பிரதான ஊடகங்களுக்கு, குறிப்பாக செய்தித் தாள்களுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளன, ஏனெனில் சமூக ஊடகங்களின் பயன்பாடு அல்லது உள்ளடக்கங்களைக் கட்டுப்படுத்த எந்த சட்டங்களும் கட்டுப்பாடுகளும் இல்லை. பயனர்கள் எல்லைகள் இல்லை என்று கருதுகின்றனர்" என்று ஜனாதிபதி இங்கு சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதை நியாயப்படுத்த அவர் இதனைச் சொல்லியிருக்கின்றார். ஜனாதிபதி சொல்வதை முழுமையாக நிராகரித்துவிட முடியாது என்றாலும் கூட, சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி இப்போது முற்பட்டிருப்பதற்கு வேறு காரணங்கள் உள்ளன.

அரசாங்கத்தினால் திடுதிடுப்பெனக் கொண்டுவரப்பட்டுள்ள "நிகழ்நிலை காப்புச் சட்ட வரைபு" மற்றும், ஜனாதிபதி நிகழ்த்திய உரை என்பன தெளிவான ஒரு செய்தியை வெளிப்படுத்தியுள்ளது. சமூக ஊடகங்கள் மீது ரணில் ஒரு போரை ஆரம்பித்துவிட்டார் என்பதுதான் அது. நாட்டின் பிரதான பத்திரிகை நிறுவனங்களின் ஆதரவையும் இதற்காக அவர் பெற்றிருக்கின்றார். பிரதான பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் முன்பு போல அவற்றின் விற்பனை இல்லை. சமூக ஊடகங்களின் பெருக்கமும், அவை விரைவாக செய்தியைக் கொண்டுவருவதும் இதற்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுகின்றது. அதனால்தான், பிரதான பத்திரிகைகள் இவ்விடயத்தில் ரணிலை ஆதரிப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், ரணிலின் இந்த நகர்வுக்கு அது மட்டும் காரணம் அல்ல!

அகிலன்

சமூக ஊடகங்கள் குறித்தான எதிர்மறையான கருத்துக்களுக்கு பல காரணங்கள் உள்ளன. அவை சட்டத்தினால் கட்டுப்படுத்த முடியாதவையாக உள்ளன என்பது முதலாவது. சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்ட வரையறைகள் எதுவும் இல்லை என்றாலும் கூட, வேறு சில சட்டங்கள் அதனைக் கட்டுப்படுத்தக்கூடியவையாக உள்ளன. உதாரணமாக – சமூக ஊடகங்களில் சில பதிவுகளைப் போட்டவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலமாக கைதாகியிருக்கின்றார்கள்.

ஆனால், அரசாங்கத்தின் அச்சம் அதுவல்ல. சமூக ஊடகங்களில் முன்வைக்கப்படும் விமர்சனங்கள், மற்றும் நெருக்கடியான நேரங்களில் சமூக ஊடகங்களின் பங்களிப்பு அரசாங்கத்துக்கே ஆபத்தானதாகிவிடலாம் என்பதுதான் அரசாங்கத்தின் பதற்றத்துக்குக் காரணம். ஜனாதிபதியும் இதே காரணத்தினால்தான் சமூக ஊடகங்களைக் கண்டு அஞ்சுகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமூக ஊடகங்களின் பாவனையை கட்டுப்படுத்த அல்லது கட்டுப்படுத்த முயற்சிப்பதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றது.

முதலாவதாக, சமூக அமைதியின்மை மற்றும் உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் தவறான தகவல்களை பரப்புவதற்கு சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்படலாம். அதனால்தான், தவறான தகவல்கள் பரவுவதை தடுக்கும் வகையில் சமூக ஊடகங்களை கட்டுப்படுத்த விக்கிரமசிங்க முயற்சித்து வருகிறார் என்று அரச தரப்பில் சொல்லப்படுகின்றது.

இரண்டாவது, தீவிரவாதக் குழுக்கள் மற்றும் பிற அமைப்புக்கள் தமது பரப்புரைகளை மேற்கொள்வதற்கும் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்கும் சமூக ஊடகங்களை பயன்படுத்தப்படலாம். அதனால், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த சமூக ஊடகங்களை கட்டுப் படுத்த விக்கிரமசிங்க முயற்சிக்கிறார் என்று அவருக்கு சார்பானவர்கள் அதனை நியாயப்படுத்துகின்றார்கள்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# சிறீலங்கா - இரண்டாம் தரமல்ல
# மூன்றாம் தரம்

கடந்தவாரம் சிறீலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜேர்மனிய தொலைக்காட்சி ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில், எங்களை இரண்டாம் தரமாகப் பார்க்கிறீர்களா? எனக் கேள்வியெழுப்பி பெரும் கோபத்தைக் கொட்டித்தீர்த்தார். அதாவது சிறீலங்காவானது உன்னதமான அரசியல், பொருளாதார, கலாசார விழுமியங்களைக் கொண்டதொரு நாடு. அப்படியொரு நாட்டினை மேற்குசார்ந்த மேட்டிமைத் தனத்தோடு நின்று கொண்டு, எப்படி தரக்குறைவாகக் கேள்வி கேட்கலாம் என்பதுதான் அவரின் கோபத்துக்குக் காரணம். குறித்த நேர்காணலைச் செய்தவர் கேட்ட கேள்வியோ, ஈஸ்டர் தாக்குதல், சனல் 4 வீடியோ, அதற்கான சர்வதேச விசாரணை என்பதாக இருந்தது. எனவே அதற்குப் பதில் சொல்லமுடியாத ரணில் விக்கிரமசிங்க, கோபத்தைக் கொட்டித்தீர்த்த அதேவேளை, சிங்கள மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கும் ரணில் என்றால்மேற்குசார்புடையவர்என்கிறபிம்பத்தைத் தகர்க்கவும் பயன்படுத்திக்கொண்டார். அடுத்து வரவுள்ளஜனாதிபதி தேர்தலுக்கானபரப்புரைக்குப் பெரிதும் பயன்படுத்தப்படப்போகும் இந்த சம்பவத்தை ரணில் தன் பக்கம் லாவகமாகத் திருப்பிக்கொண்டார். அந்த நேர்காணல் வெளியானதிலிருந்து சிங்கள சமூகவலைதளங்களிலும், இனவாத ஊடகங்களில் ரணில் ஒரு தேசிய வீரனாக புகழப்படுகின்றமை இதற்குத் தகுந்த எடுத்துக் காட்டு.



சர்வதேச ஊடகமொன்றில் வெளியான இந்த நேர்காணலானது, உள்நாட்டு அரசியலில் இப்படியாக வடிவமெடுத்துக் கொண்டிருக்க, இங்கு ஆராயப்படவேண்டிய விடயம் ரணில் விக்கிரம சிங்க கோபப்பட்டதில் ஏதாவது நியாயமுள்ளதா என்பதே ஆகும். இந்நாட்டின் போக்கு ரணில் கேட்டதன்படியே இரண்டாம் தரத்திலாவது இருக்கிறதா என்பதை கண்டடைதலே ஆகும்.

நாடொன்றின் ஒழுக்கம் அதன் தேசியப் பாதுகாப்புடன் தொடர்புபட்டது. அந்தவகையில் சிறீலங்கா எனும் சிங்கள பெரும்பான்மைவாத மனோநிலை கொண்ட தேசத்தின் இராணுவத்தினரின் மொத்த எண்ணிக்கை மூன்று லட்சத்து நாற்பத்து ஆராயிரம் பேர். இதில் மூன்று நபர்களுக்கு ஒரு இராணுவத்தினன் எனும் கணக்கில் இராணுவத்தினர் வடக்கு, கிழக்கு பாகங்களில் குவிக்கப்பட்டுள்ளனர். உலகளவில் பதினெட்டாவது இடத்தில் இராணுவத் தொகையைக் கொண்டிருக்கும் இந்நாட்டின் இராணுவம், உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும்சரி மிகவும் ஒழுக்கக்கேடான– தமிழ் இனப்படுகொலையில்-தமிழ் இனவழிப்பில் ஈடுபடுகின்ற தரப்பினராக ஆதாரத்துடன் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. வடக்கு, கிழக்கு பகுதிகளில் போர் வேளைகளில் சரணடைந்தவர்களை சுட்டுக்கொன்றது, அப்பாவிகளைக் கடத்தியது, கடத்திக் காணாமலாக்கியமை, தமிழ் மக்களின் வளங்களை சூறையாடியமை, நில அபகரிப்புக்களில் ஈடுபடுகின்றமை, போதைப் பொருள் கடத்துகின்றமை, பொதுமக்களின் பொருட்களைத் திருடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றமை, பௌத்த மேலாதிக்கத்திற்கான மறைமுக வேலைத் திட்டங்களில் ஈடுபடுகின்றமை என உள்நாட்டுக்குள் மிகவும் கேவலமான வேலைகளில் ஈடுபடும் இராணுவத்தை இந்நாடு கொண்டிருக்கின்றது. அதேபோல ஐ.நா பாதுகாப்பு இராணுவத்தில் இணைக்கப்பட்ட சிறீலங்கா இராணுவம்கூட பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் நாடுகளில் வாழும் பெண்களைப் பாலியல் வன்முறைகளுக்குட்படுத்தியதாக நிரூபிக்கப்பட்ட குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



ஜெயராஜா துரைராஜா

நாடொன்றில் தரத்தை நிர்ணயிப்பத்தில் அந்நாட்டினை ஆட்சி செய்த – ஆட்சி செய்கின்ற தலைவர்களினது பங்கும் கணிசமானது. சிறீலங்கா தேசத்தை பிரிட்டிஸ்காரரர்களிடமிருந்து வலிந்து பெற்றுக்கொண்ட சிங்களத் தலைவர்களின் முதல் அரசியல் முதலீடே தமிழர் விரோதப் போக்கே காணப்பட்டது. கண்மூடித்தனமாக தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை விதைத்தனர். 1947 ஆம் ஆண்டில் டட்லி சேனநாயக்கா தொடங்கி, 1956 இல் பண்டாராநாயக்கா வரை இந்த இனவாத அரசியலின் அடித்தளத்தைப் பலமாக இட்டனர். அதன்பிறகு அந்த இனவாதச் சக்கரம் தமிழர்களின் தலைகளில் ஏறி இலகுவாகப் பயணித்தது. இடையில் எந்த சிங்கள அரசியல்வாதியும் அதனைத் தடுத்துநிறுத்தவில்லை. அதற்கு முயற்சிக்கவுமில்லை. தமிழர்களைக் கொல்வது, தமிழர்களின் வளங்களை சூறையாடுவது, தமிழர்கள் தேடிவைத்திருக்கும் சொத்துக்களை கொள்ளையடிப்பது, தமிழர்களைக் கடத்தி கப்பம் கோருவது என்பவைகளை இந்த அரசியல் வாதிகளின் தேர்தல்கால வாக்குறுதிகளாக இருந்தன. ஒரு நாட்டின் சக மக்களின் இனவாதத்தைக் கக்கி, அதனையே தம் அரசியல் இருப்புக்கான ஆயுமாக கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தி வரும் அரசியல்வாதிகளை உலக வரைபடத்தில் சிறீலங்காவைத் தவிர வேறெங்கும் பார்க்கமுடியுமா? இதற்கு விதிவிலக்கானவராக




ரணில் விக்கிரமசிங்கவால் மனமுவந்து சொல்லத் தான் முடியுமா?

உலகளவில் அதிக ஊழல் நிலவும் நாடுகளின் பட்டியலில் சிறீலங்கா 36 ஆவது இடத்தில் இடம்பிடித்திருக்கிறது. ஊழலின் தாயகமாக மாறிவிட்ட இந்தியாவை விட சிறீலங்கா நான்கு இடங்கள் முன்னிலை வகிக்கின்ற அளவில் ஊழல் நிலமைகள் இருக்கின்றன. அரசியல்வாதிகளுக்கு, பொலிஸாருக்கு, நிர்வாக அதிகாரிகளுக்கு கையூட்டுக் கொடுத்தால் இங்கு எந்த காரியங்களையும் சாதித்துக்கொள்ள முடியும். சாதாரணமாக ஓர் அரச அலுவலகத்தில் கடைநிலை ஊழியர்கள் தொடக்கம், உயரதிகாரி வரைக்கும் கையூட்டுப் பெறும் படிநிலை இயல்பான போக்கில் இயங்கிக் கொண்டே இருக்கிறது. கையூட்டு வாங்காமல் ஒரு காரியத்தை நிறைவேற்றுவது தவறானது என்கிற முறைமைக்கு பொதுமக்களும் பழக்கப்படுத்தப்பட்டுவிட்டார்கள். இவ்வளவு நிதி நெருக்கடி நிலையிலும், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் ஒன்றாக ஊழலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது முக்கியமாக வலியுறுத்தப்பட்டபோதிலும், இதுவரையில் அதற்கான எந்த வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. ராஜபக்ச குடும்பத்தினர் நாட்டைக் கொள்ளையடித்து விட்டனர் எனக் கோரி, தான் வந்து அதனை மீட்பேன் என பின்கதவால் ஆட்சியைப் பிடித்த ரணிலால், ராஜபக்சக்கள் திருடிய ஒரு சதத்தைக் கூட மீட்க முடியவில்லை. இடியப்ப சிக்கலைப் போல இயங்கும் சீறீலங்கா எனும் ஊழல் சாம்ராஜ்யத்தை ரணிலால் மட்டுமல்ல, எவராலும் கட்டுக்குள் கொண்டுவரமுடியாது என்பதே யதார்த்தமாகியிருக்கின்ற நிலையில், இந்நாட்டினை எப்படி இரண்டாம் தர நாடாகப் பிரகடனம் செய்ய முடியும்?



ஒரு நாட்டை நிர்வகிக்கும் அனைத்துத் தரப்பினரும், தவறான பாதையில் சென்றாலும், அவர்கள் அனைவரையும் நீதியின் முன் நிறுத்தி, தண்டனை வழங்கி, மீளவும் சட்டத்தின் ஆட்சியைக் கொண்டுவரலாம் என்பதே ஜனநாயகத்தின் இறுதி நம்பிக்கை. ஆனால் சிறீலங்காவின் நிலமையோ, சரியான நீதியை வழங்கப்பாடுபடும் நீதிபதிகளே அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறும் கட்டாயம் எழுந்திருக்கின்றது. பௌத்த பிக்குகள் எழுதிக்கொடுப்பதையும், அரசியல்வாதிகள் தொலைபேசியில் சொல்வதையும் தீர்ப்பாக எழுதும் நீதித்துறை தான் இங்கு காணப்படுகின்றது. இதற்கு எடுத்துக் காட்டாக கடந்தவாரத்தில் கூட இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. சமநேரத்தில் சாட்சி சொல்ல நீதிமன்றில் முன்னிலையாகுபவர்கள், சாட்சி சொல்லிவிட்டு நீதிமன்ற வாசலுக்கு வரும் போதே சுட்டுக்கொல்லப்படும் பயங்கரவாத நிலை இந்நாட்டில் காணப்படுகின்றது. பாரியளவு படையப் பெருக்கத்தைக் கொண்டிருக்கும் சிறீலங்காவில், ஆயுததாரிகளும், பாதாள உலகக் கோஸ்ரியினரும், ஆட்கடத்தல் காரரர்களும், போதைப் பொருள் கடத்தல் காரரர்களும் மிகச் சாதாரணமாக இயங்கும் நிலைதான்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

**முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலையடுத்து அவர் நாட்டைவிட்டு வெளியேறியிருக்கின்றார். இதன் மூலமாக எவ்வாறான ஒரு செய்தி உணர்த்தப்பட்டுள்ளது?**

அவர் நாட்டை விட்டு வெளியேறு வதக்கான காரணி என்ன என்பது ஒரு விடையம் அவராகவே சில காரணங்களை குறிப்பிட்டு இருக்கிறார் அவர் குறிப்பிட்டதில் மிக முக்கிய மானது தனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் தொடர் அழுத்தம் ஏற்படுவதாகவும் தொடர்ந்தும் தன்னால் பதவி வகிக்க முடியாத நிலமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே தான் பதவி விலகுவதாக நிதிச் சேவை ஆணைக்குழுவுக்கு கடிதம் கொடுத்து விட்டு நாட்டை விட்டு வெளி யேறி இருக்கிறார்.



# தனது சிங்கள முகத்தை ரணில் காட்டியுள்ளார்



**முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா அவரது உயிருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலையடுத்து சுயாதீனமான முறையில் செயற்படமுடியாத நிலையில் பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேறியிருக்கின்றார். இது புதியதொரு சர்ச்சையை உருவாக்கியிருக்கின்றது. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன. இவை தொடா்பாகவும் சர்வதேச விசாரணை எதுவும் இடம்பெறாது என ஜனாதிபதி அறிவித்திருப்பது குறித்தும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

## சுரேஷ் பிரேமச்சந்திரன் செவ்வி

ஆகவே இங்குள்ள நிலைமை என்னவென்றால், நீதிபதி சரவணராஜா அவர்கள் சமர்ப்பித்த ஐந்து வழக்குகள் மேல் நீதிமன்றத்தில் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. அந்த வழக்குகளில் முக்கியமானது குருந்தூர்மலை தொடர்பானது. திரு. சரவணராஜா அவர்கள் குறிப்பிட்ட இடத்துக்குத் தானே நேரடியாகச் சென்று, பார்வையிட்டு அதனை நீதிமன்றத்துக்கு அறிவித்திருக்கிறார். நீதிபதி சரவணராஜா மேல் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் பாரதூரமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கிறார். அதுமட்டுமன்றி புலனாய்வாளர்களும் அவரைப் பின்தொடர்வதாக அறியப்படுகின்றது. இவ்வாறானஒருசூழலில்தான்நீதிபதிசரவணராஜா அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றதாக ஊடகங்களிலும் அவரது பதவி விலகல் கடிதத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில்தான் அவரது பதவி விலகல் தொடர்பாக நாங்கள் பார்க்க வேண்டும். இதில் முக்கியமாக சொல்லவேண்டிய விடையம் என்னவென்றால் சரவணராஜாவுக்கு எதிரான விடையம் அல்ல அங்கே அவருக்கு முன்பாக இருந்த நீதிபதி அவர்கள் குருந்தூர் மலையில் புத்தர் கோயில் கட்டுவதற்கான இடைக்கால தடையை விதித்திருந்தார். ஆனால் அந்த இடைக்கால தடை மீறப்பட்டு புத்தர் கோயில் கட்டப்பட்டது ஒரு நீதிபதி வழங்கிய தீர்ப்பை புத்த பிக்குகள் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை என்பது மாத்திரம் அல்ல புத்த பிக்குகளுக்கு ஆதரவாக இராணுவத்தினர் மற்றும் காவல் துறையினர் செயற்பட்டனர்.

ஆகவே இவ்வாறான நிலையில் தமிழ் நீதிபதிகள் சட்டங்களுக்கு உட்பட்டு ஒரு தீர்ப்பை வழங்கினால் அந்த தீர்ப்பை இராணுவம், காவல் துறை, புத்த பிக்குகள் கூட ஏற்றுக்கொள்ள வில்லை நீதித்துறையை அவமதித்து சட்ட திட்டங்களுக்கு அப்பால் பட்டு செயற்படுகின்ற ஒரு நிலையில் இந்த நீதித்துறையிடம் இருந்து தமிழ் மக்கள் ஏதாவது பலாபலன்களை பெற்றுக் கொள்ள முடியுமா என்பதுதான் இப்போது இருக்க கூடிய கேள்வி.

ஆகவே இப்போது நடைபெறுகின்ற போராட்டம் தமிழ் மக்களுக்கான நீதி என்பது மறுக்கப்பட்டு இருக்கிறது. திரு. சரவணராஜா நீதிபதியின் பதவி விலகல் என்பது அதனுடன் ஒப்பிட்டுத்தான் நாங்கள் பார்க்க வேண்டும்.

**நீதிபதிக்கான அச்சுறுத்தலையடுத்து பிரிந்து நின்ற தமிழ்க் கட்சிகளில் பெரும்பாலானவை ஒன்றிரணைந்து போராட்டங்களை முன்னெடுக்கின்றன. இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியை சேர்ந்த என்னுடைய கட்சி *T.R.L.F.* ரெலோ, புளட், மற்றும் சிறிகந்தா அவர்களின் தமிழ் தேசியக் கட்சி ஜனநாயக போராளிகள் என நாங்கள் இவ்வாறான ஒரு கூட்டத்தை கூடி அதில் தமிழரசு கட்சி திரு விக்கினேஸ்வரன் கட்சி என இணைத்துத்தான் நாங்கள் இந்த மனித சங்கிலி போராட்டத்தை நடத்தினோம். இறுதியில் தமிழ் காங்கிரஸ்சும் அதற்கு எதிரான அறிக்கையை வெளியிட்டு போராட்டத்தின் ஒரு பகுதியில் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். ஆகவே என்னைப் பொறுத்தவரையில் இது ஒரு நல்லதோர் முன்மாதிரி என்று கருதுகிறேன். நேற்று இந்த போராட்டம் நிறைவுற்ற பின் நாங்கள் ஒன்று கலந்து கூடி பேசியிருந்தோம். இதில் தமிழரசு கட்சி மற்றும் ஏனைய அனைத்து கட்சிகளும் கலந்து கொண்டிருந்தோம் அடுத்த கட்டம் என்ன செய்வது என்பது தொடர்பான ஒரு ஆலோசனை கூட்டமாக இருந்தது. ஆகவே தமிழ் மக்களின் இருப்பு தொடர்பாக எங்களது உரிமைகள் தொடர்பாக தொடர்ச்சியாக கட்சி பேதங்களுக்கு அப்பால் தேர்தல் நிலவரங்களுக்கு அப்பால் தமிழ் மக்களுடைய தேவைகள் இருப்புக்கள் தொடர்பாக கூட்டாக ஒரு முடிவு எடுப்பதாக இருந்தால் அது சிறப்பாக இருக்கும். இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த விடயம் தொடர்ச்சியாக முன்னேற வேண்டும் என்றுதான் விரும்புகிறேன்.

**இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தவர்களில் ஒருவர் என்ற முறையில், இதில் பொது மக்களின் பங்கேற்பு - அதில் அவர்கள் கொண்டிருந்த ஆர்வம் என்பன எவ்வாறிருந்தது?**

முதலாவதாக நாங்கள் பிரச்சாரத்திற்காக இரண்டு நாட்கள் மாத்திரம் தான் எடுத்து கொண்டோம். அப்படி இருந்தும் பத்தாயிரத்திற்கும் அதிகமாக துண்டு பிரசுரங்களை அச்சிட்டு அனேகமாக யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வழங்கி இருந்தோம். குறிப்பாக கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் வழங்கி இருந்தோம்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# கிழக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் பௌத்த துறவிகளின் அத்துமீறல்கள்




மட்டு.நகரான்

வடகிழக்கு மாகாணம் தமிழர் தாயகம் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சிங்கள தேசம் இன்று பல்வேறு அச்சுறுத்தல்களை முன்னெடுத்து வருகின்றது. வடகிழக்கில் தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை, தமிழர்கள் மீது மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகபோராடி வருபவர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் இன்று பல்வேறு நெருக்குவாரங்களையும் அத்துமீறல்களையும் எதிர்கொண்டுவருவதுடன் கிழக்கில் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் வெளிவரும் போது அதுதொடர்பில் பேசும் மனித உரிமை செயற்பாட்டாளர்களை அச்சுறுத்தி வாய்மூடி மௌனிகளாக மாற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கிழக்கில் மனித உரிமை செயற்பாட்டாளர்களையும் தமிழ் தேசிய செயற்பாட்டாளர்களையும் அச்சுறுத்தி பணியவைத்து தமது அத்துமீறிய செயற்பாடுகளை முன்னெடுக்கமுடியும் என்று நினைக்கும் சிங்கள பெரும்பான்மை அரசுகள் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களை மேற்கொண்டுவருகின்றது.

இந்த நாட்டில் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் வடகிழக்கு மாகாணத்தில் சிங்கள மயமாக்கல் செயற்பாடுகளும் தமிழர்களின் குரல்வளையை நசுக்கும் செயற்பாடுகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றன. அதிலும் கிழக்கில் தொல்பொருள் என்ற போர்வையில் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் நபர்களை இலக்குவைத்தும் சனல்4 விவகாரத்தின் பின்னர் கிழக்கில் உள்ள ஒட்டுக்குழுவின் அரசியல்கட்சியொன்றின் செயற்பாடுகளை விமர்சிப்பவர்களும் இந்த நாட்டிற்கு எதிரானவர்களாக காட்டும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.



திருகோணமலையில் கடந்த சில வாரங்களாகதிருக்கோணமலையில்பிக்குகளின்அராஜகம் அதிகரித்துள்ள நிலையில், திருக்கோணமலை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் கள், சிவில் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மீது பயங்கரவாத தடுப்பு பிரிவினரினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்.

பெரியகுளத்தில் சட்ட விரோத விகாரை அமைப்பதற்கு எதிராக போராடிய ராஜு எனும் சமூக செயற்பாட்டாளரை பயங்கரவாத தடுப்பு பிரிவினர், (19.09.2023) அவரது வீடு மற்றும் வேலை தளங்களுக்கு தேடிச்சென்று விசாரணை செய்ததுடன், தங்களுடைய அலுவலகத்துக்கு வருமாறும் அழைப்பாணை விடுத்துள்ளனர். அவரை மிரட்டும் வகையிலும் நடந்து கொண்டுள்ளனர்.

இதேபோன்று மேலும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அவர்கள் திருக்கோணமலையில் தாக்கப்பட்டதை தொடர்ந்து, திருக்கோணமலை முன்னணிசெயற்பாட்டாளர்களையும்பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தேடி வருகின்றனர்.இவ்வாறான தொடர் செயற்பாடுகளால், திருக்கோணமலை செயற்பாட்டாளர்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாகி உள்ளனர்.



இது தொடர்பில் சமூக செயற்பாட்டாளர் ஒருவரிடம் வினாவிய போது, "பிக்குகள் மாவட்டத்தின் முக்கிய கூட்டமாகிய மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்குள் அத்துமீறி நுழைந்து இலங்கை ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதி கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை அவமானப்படுத்திய போதும் பிக்குக்களை இதுவரை கைது செய்யாத காவல்துறை, சமூக செயற்பாட்டாளர்கள் மீது மட்டும் இவ்வாறு அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வது இலங்கையின் சட்ட ஒழுங்கை கேள்விக்கு உட்படுத்தி உள்ளது" என்ற கருத்தை தெரிவித்தார்.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்திலும் யுத்தம் மௌனிக்கப்பட்ட காலம் தொடக்கம் தமிழர்களின் உரிமைகளுக்காகவும் இருப்புக்காகவும் போராடிவருபவர்களை அச்சுறுத்தும் வகையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.



மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பகுதியில் உள்ள மனிதவுரிமை செயற்பாட்டாளர், தமிழ் இளையோர் மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான ஜீவரெத்தினம் தவேஸ்வரன் அவர்கள் கொழும்பில் இருந்து வந்த பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவினரால் 11 மணித்தியாலம் 30 நிமிடங்கள் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளார்.

03.10.2023 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு அழைப்பதாக இலங்கை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவினரால் கிடைக்கப்பெற்ற கடிதத்தின் படி மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவில் காலை 9:15 மணிக்கு சென்று இருந்தார். அவர்கள் அனுப்பியிருந்த கடிதத்தில் எந்த விடயம் தொடர்பாக வாக்குமூலம் விசாரணை என குறிப்பிடப்படாத நிலையில் விசாரணையின் போது தங்களில் விடுதலைப்புலிகள் மீள் உருவாக்கம் தொடர்பாக சந்தேகம் இருப்பதாகவும் அது சார்ந்து விசாரிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது. பின்னர் காலை 9:15மணிக்கு விசாரணைக்கு சென்றவர் இரவு 08:45 மணிக்கு வாக்குமூலம் மற்றும் விசாரணைகளின் பின்னர் வெளியில் விடுவிக்கப்பட்டதாகவும் கூறியிருந்தார்.



இது தொடர்பில் ஜீவரெத்தினம் தவேஸ்வரன் தெரிவிக்கையில் "இந்த விசாரணையின் போது அடிப்படை மனிதவுரிமை மீறப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட உள்ளதாகவும் கூறினார். நாட்டில் கடந்த கால பயங்கரவாத செயற்பாடுகளோடு தொடர்புபட்டவர்கள் என குற்றம் சாட்டப்படுபவர்கள் சுதந்திரமாக வெளியில் நடமாடிக் கொண்டிருக்கையில் மனிதவுரிமை

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ஈழத் தமிழின விடுதலைக்குப் படியாகும் பன்னாட்டுக் குற்றங்கள்

# International Crimes

## பகுதி 04

பன்னாட்டுக் குற்றங்களில் மூன்றாவது குற்றமாக வகைப்படுத்தப்பட்டது இனப் படுகொலையாகும். இதனை இனவழிப்பு என்றும் தமிழில் பகர்வர். யூதர்களை நாசிகள் வதம்செய்யத்தொடங்கிய போதே அக்குற்றம் ஓர் போர்க்குற்றமாகவோ அல்லது மானுடத்திற் கெதிரான குற்றமாகவோ வகைப்படுத்துவது நடைபெற்ற வதையைச் சிறுமைப்படுத்திவிடும் என்பதை உலகத்தலைவர்கள் அறிந்திருந்தனர்.

அதனை மிகத் தெளிவாக அன்றைய பிரித்தானியப் பிரதமர் பின்வருமாறு தெரிவித் திருந்தார். நாங்கள் பெயர் தெரியாத குற்ற மொன்றின் முன்னே நிற்கின்றோம் - *we are in the presence of the crime without a name*எனவே புதிதான அக்குற்றத்திற்கொரு பெயரைப் புனைய முயன்றபோதே யூதரும் போலந்தின் சட்டவியலாளருமான ரபேல் லெம்கின் இனப் படுகொலை – ஜெனோசைட் என்ற பெயரை முதன் முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

ஜெனே என்ற கிரேக்க சொல்லையும் சைட் என்ற இலத்தீன் சொல்லையும் இணைத்ததன் ஊடாக இனப்படுகொலை என்ற சொல்லை லெம்கின் உருவாக்கினார்.

***Geno* - தேசிய இனம் அல்லது இனக்குழுமம்**
***Cide* - கொலை**

**இனப்படுகொலையென்றால்**

“தேசிய இனமொன்றின் வாழ்வை தாங்கி நிற்கும் முக்கிய மூலாதாரங்களைச் சிதைப்பதால் அந்த இனம் தாமாகவே துடைத்தழிந்து போய்விடுவதை நோக்கமாக கொண்டு ஒருங்கிணைக்கப்படும் பல் வேறு நடவடிக்கைகள்” என லெம்கின் இனப்படு கொலையை வரைவிலக்கணப்படுத்துகின்றார்.



அத்துடன் இனப்படுகொலை என்பது வெறுமனே ஒரு இனத்தின் வாழ்வைத் துடைத் தழித்து விடுவது மட்டுமல்ல, அவ்வினத்தை வாழத் தடுப்பதும் (பெருக்கத்தைக் கட்டுப்படுத்தல்) அவர் களின் வாழ்வையும் சுகாதாரத்தையும் அழிக்கத் தக்க சாதனங்களை ஏவுதலும் (செயற்கைத் தொற்று, வதைமுகாம்களில் சாகும்வரை வேலை, குடும்பங்களைப் பிரித்து விடுவதால் சனத் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல்) கூட இனப்படுகொலைதான் என்கிறார் லெம்கின்.

மேலும் பண்பாட்டை அழித்து அதனை இழக்கச்செய்து விடுவதும் இனப்படுகொலை என்றார்; லெம்கின்.

பண்பாட்டுப் பின்புலத்தை எடுத்து நோக்கினால் “குறித்த ஒரு இனம் ஒரு தேசத்தவராகவோ அல்லது இனக்குழுவாகவோ ஒன்றித்துவாழாதவிடத்துஅவர்களின்பண்பாட்டுப் பங்களிப்பின் ஊடாக உருவாகும் நாகரீகமும் பண்பாடும் உருவாகாமலேயேஅழிந்துவிடும்”

எனக் கூறிய லெம்கின் நாகரீகமும் பண்பாடும் இல்லாத அல்லது அவை அழிந்து விட்ட இனம், தானொரு தேசிய இனம் என்ற தகுதியை இழந்துவிடும் என்பதைச் சரியாகக்



முனைவர்
**ஸ்ரீஞானேஸ்வன்**
பன்னாட்டுக் குற்றங்கள்
பொத்தக ஆசிரியர்,
பட்டய முகாமைக்
கணக்காளர்

கணக்கிலெடுத்து திட்டமிட்டு அவ்வினத் தின் பண்பாட்டை இழக்க செய்வதும் இனப்படு கொலை என்றே வரையறுத்தார்.

எனினும் லெம்கினால் முன்மொழியப் பட்ட இப் பண்பாட்டு இனப்படுகொலை நுட்ப மானது இனப்படுகொலைக்கான பன்னாட்டு வரைபைத் தீர்மானிக்கும் போது கருத்திற் கொள்ளப் படவில்லை என லியோரா பில்ஸ்கி மற்றும் ரேச்சல் க்லாஸ்பேர்ன் ஆகியோர் சர்வதேச சட்டங்கள் தொடர்பாக ஐரோப்பிய நாளேட்டின் இருபத்தியொன்பதாவது பதிப்பிற்கு எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளனர்.

**இக் கட்டுரையில்**

***1.இனப்படுகொலைக்கான பன்னாட்டு வரைபா னது பௌதீக மற்றும் உயிரியல் விடயங்களுடன் இனப்படுகொலையின் வரையறுப்பை மட்டுப் படுத்திக் கொண்டுள்ளது எனவும்***

***2.இனப்படுகொலைக்கான கூறுகளில் ஒன்றாக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் பண்பாட்டு அழிப்பை இனப்படுகொலை எனப் பன்னாட்டு வரைபு நிறுவத்தவறியுள்ளது என்றும்***

***3.பௌதீக, உயிரியல் காரணிகளுடன் மட்டு மன்றி அரசியல் பொருளாதார, கலாசார பிரிவு களையும் இனப்படுகொலை தன்னகத்தே கொண்டிருப் பதாகவும்***

***4.எவ்வாறாயினும் பௌதீக அழிப்பே இனப் படுகொலையின் அச்சாணியாக இருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.***

பண்பாட்டு இனப்படுகொலையை விரி வாக ஆராய்ந்ததொரு அமைப்பாக கனேடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு காணப்படுகின்றது. கனடாவின் பழங்குடியின ருக்கு நிகழ்ந்த கொடுமைகள் இனப்படு கொலையா? இல்லையா? என்பதனைக் கண்டு பிடிக்க அமைக்கப்பட்ட இக் குழு பழங்குடி மக்களுக்காக கனடாவில் ஆரம்பிக்கப்பட்டு நடாத் தப்பட்ட தங்கிப் படிக்கும் கட்டாயக் கல்விப் பாடசாலைகளில் பண்பாட்டு இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டது 26 என அறிக்கையிட்டுள்ளது.

இனப்படுகொலைக்கான ஜெனீவா பன் னாட்டு வரைபின் அகவிதி 2 நிர்மூலமாக்கும் பௌதீக அழிப்பையே இனப்படுகொலை என மிகத் தெளிவாக வரையறுத்துள்ளது. அவ் வரையறுப்பின்படி நிர்மூலமாக்குவதற்கான மிகப் பொதுவான நடவடிக்கையாக ஒரு குழுவின் அங்கத்தவர்களை கொல்வதைக் கருதலாம் என தெரிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது.

பாதுகாப்புச்சபையின் தலைவருக்கு முன்னிலைப் படுத்தும் ஆவணமொன்றில் (S/1994/674/ge;jp 97) ‘‘பெருமெடுப்பில் நிகழும் படுகொலைகள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை புரிவதன் ஊடாக ஒரு அடையாளப்படுத்தப்பட்ட குழுவை முற்றாக அல்லது பகுதியளவில் அழிக்கும் எண்ணம் கொண்டிருத்தல் இனப்படுகொலைக்கான நட வடிக்கையாகவே கருதப்படும். கூட்டுவாழ்வு அல்லது சுபாவம் அல்லது இயலுமை போன்ற காரணிகளின் அடிப்படையில் கூட்டாக அடை யாளப் படுத்தப்படுபவர்களின் மீது தனித்தனி யாக நிகழ்த்தப்படும் குற்றங்கள் கூட இனப்படு கொலைக்கென உருவாக்கப் பட்டுள்ள பன்னாட்டு வரைவின் தத்துவங்களின் கீழ் இனப்படுகொலை ஆகும்’’ எனக் குறிப்பிட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு நடைமுறை வரை பானது தனது 260 ஆம் இலக்கத் தீர்மானத்தின் ஊடாக “இனப்படுகொலையை ஓர் பன்னாட்டுக் குற்றம்” என உறுதிப்படுத்தியது. அதன் பின்னரே இனப்படுகொலை என்ற வார்த்தைக்கான சட்ட வலு உருவாகியது.

1951 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வந்த இவ்வரைபின் 2 ஆம் அகவிதியானது இனப்படுகொலையினைப் பின்வருமாறு வரை விலக்கணஞ் செய்கின்றது.

‘ஒரு தேசிய இனத்தை, இனக்குழுமத்தை, குலமரபினரை (சாதியினரை) அல்லது சமயத் தவரை முழுமையாக அல்லது பகுதியளவில் நிர்மூலமாக்கும் உள்நோக்கத்துடன் முன்னெடுக் கப்படும்

- அக்குழுவின் அங்கத்தவர்களைக் கொல்லுதல்.
- அக்குழுவின் அங்கத்தவர்களிற்கு கடுமையான உடல், உளக்காயங்களை ஏற்படுத்துதல்.

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# வீழ்ச்சிப் போக்கில் சுகாதாரத்துறை

துரைசாமி நடராஜா

பெருந்தோட்ட மக்கள் பல்வேறு துறைகளிலும் பின்தங்கிய வெளிப்பாடுகளைக் கொண்டுள்ளமை தெரிந்ததாகும். இவற்றுள் சுகாதாரத்துறை குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகின்றது. பெருந்தோட்ட சுகாதார நிலை மைகள் நீண்ட காலமாகவே திருப்தியற்ற வெளிப்பாடுகளை பிரதிபலிக்கின்றன.

இத்துறையின் அபிவிருத்தி கருதி அவ்வப்போது சிற்சில முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டபோதும் உரிய சாதக விளைவுகள் இன்னும் கிடைப்பதாக இல்லை. தோட்டப்புற வைத்தியசாலைகளும் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்ற ஒரு போக்கு காணப்படுகின்றது.



இந்நிலையில் தோட்டப்புற வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று சிறப்பான சுகாதார சேவைகளை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் அண்மையில் பாராளுமன்றத்தில் வலியுறுத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு சமூகம் திடகாத்திரமான சமூகமாக உருவெடுப்பதால் சாதக விளைவுகள் பலவற்றையும் பெற்றுக் கொள்வதற்கு அது உந்து சக்தியாக அமையும் என்பதை மறுப்பதற்கில்லை. இந்த வகையில் திடகாத்திரமான சமூக உருவாக்கத்திற்கு அடித்தளமாக சுகாதாரத்துறை விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

எனினும் பெருந்தோட்ட மக்கள் சிறந்த சுகாதார சேவையினைப் பெற்றுக் கொள்வதென்பது இன்னும் எட்டாக்கனியாகவே இருந்து வருகின்றது. 19 ம் நூற்றாண்டில் இம்மக்கள் இலங்கையில் காலடி எடுத்து வைத்த காலந்தொட்டே சுகாதார நிலைமைகள் அபிவிருத்தி போக்கினை வெளிப்படுத்தாது பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றமை தொடர்பில் பலரும் தமது விசனப்பார்வையினை செலுத்தி வருகின்றனர்.

பிரித்தானிய காலனித்துவத்தின் போது பெருந்தோட்டத்துறை மக்களின் சுகாதார வசதிகள் அனைத்தும் ஆங்கிலேய பெருந்தோட்ட செய்கையாளர்களால் பொறுப்பேற்கப்பட்டிருந்தன. ஆயினும் குடிப்பெயர்வின் பின்னரான ஆரம்ப கட்ட பெருந்தோட்ட வாழ்க்கையில் இம்மக்களின் சுகாதார நிலைமைகள் மிகவும் இழிவானதாகக் காணப்பட்ட நிலையில், பிரித்தானிய பெருந்தோட்ட செய்கையாளர்கள் தவிர்ந்த சில நிறுவனங்களும் இவர்களது சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கான பங்களிப்புக்களை வழங்கின.

முக்கியமாக நோயுற்ற நிலையிலிருந்த அநேகமான தொழிலாளர்கள் பிரித்தானிய பெருந்தோட்ட செய்கையாளர்களால் கவனிக்கப்படாமையாலும், மிகவும் கடுமையாக நடத்தப்பட்டமையாலும் இலங்கையின், கண்டியில் இயங்கி வந்த *friend in Need society* இன் வைத்தியசாலை அவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகளை பாரபட்சமின்றி வழங்கியதாக 1965 ம் ஆண்டு தகவலொன்று வலியுறுத்துகின்றது. மேலும் 19 ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இவர்கள் மத்தியில் காணப்பட்ட சமூக, பொருளாதார காரணிகளும், இவர்களுக்கு எதிரான அரசியல் பாரபட்சங்களும் இவர்களின் சுகாதார வாழ்க்கையில் இன்னும் அதிகமான பாதிப்புக்களை கொண்டு வந்தன.



முக்கியமாக தோட்டங்களில் இவர்களது உழைப்பு ஆங்கிலேய பெருந்தோட்ட செய்கையாளர்களால் அளவுக்கதிகமாக சுரண்டப்பட்டமையும், அவர்களுக்கு கிடைக்கப்பெற்ற உணவு வகைகள் சுகாதாரமற்றவையாகவும், போஷாக்கற்றவையாகவும் காணப்பட்டமையும் இவர்களது உடல்நிலையில் மேலும் பாதிப்புகளைக் கொண்டு வந்ததாகவும் சுட்டிக் காட்டல்கள் இருந்து வருகின்றன.

பெருந்தோட்ட மக்களின் வேலைப்பளு, அவர்களின் நலன்களைப் புறந்தள்ளி உழைப்பை மட்டுமே உறிஞ்சுகின்ற முதலாளித்துவத்தின் போக்குகள் என்பன அம்மக்களை நோயாளர்களாக்கி சுகாதாரத் தேவையை அதிகப்படுத்தியது. இந்தியத் தமிழ் தொழிலாளர் இங்கு குடியேற்றப்பட்ட தோட்டங்கள் தொலை தூரத்தில் அமைந்திருந்தன. இதனால் இவர்கள் 'கிணற்றுத் தவளைபோல' தோட்டங்களுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.



அத்தோடு இவர்களின் பல்வேறு தேவைகளையும் தோட்டங்களுக்குள்ளேயே பூர்த்தி செய்ய வேண்டிய ஒரு நிலை காணப்பட்டது. வாடகையற்ற குடியிருப்பு, இலவச மருத்துவ விநியோகம், வைத்தியசாலை,பிரசவ விடுதி, குழந்தை பராமரிப்பு நிலையங்கள் போன்ற வசதிகள் இவ்வாறு செய்துகொடுக்கப்பட்ட வசதிகளுள் சிலவாகும் என்று புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளதோடு, எனினும் இவ்வசதிகள் ஒருபோதும் ஆகக்குறைந்த மட்டத்திற்கும் மேலாக இருக்கவில்லை என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### சட்டங்கள் உருவாக்கம்

பெருந்தோட்ட மக்கள் தொடர்ச்சியாகவே சுகாதார ரீதியான சவால்களுக்கு முகம் கொடுத்து வந்த நிலையில் இச்சவால்களைக் களைந்து சிறந்த சுகாதார சேவையினை இம்மக்களுக்காக பெற்றுக் கொடுக்கும் நோக்கில் காலப்போக்கில் சட்டங்கள் பலவும் உருவாக்கப்பட்டன. எனினும் இச்சட்டங்கள் எந்தளவுக்கு தொழிலாளர்களின் சுகாதார மேம்பாட்டிற்கு வலுவூட்டின என்பது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது.



ஆரம்ப காலத்தில் பெருந்தோட்ட மக்கள் நோய்வாய்ப்படும் நிலைமைகள் இங்கு அதிகரித்து காணப்பட்டன. ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் வைத்தியசாலைகளில் இறக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இந்நிலையில் தொழிலாளர்கள்சுகவீனமுற்றுள்ள காலப்பகுதியில் அவர்களுக்கான இருப்பிட வசதி, உணவு, வைத்திய வசதி போன்ற சில குறைந்தபட்ச வசதிகள் செய்து கொடுக்கப்படுவதனை 1865 ம் ஆண்டு சேவை ஒப்பந்தச் சட்டம் உறுதிப்படுத்தியது.

தொழிலாளர்களின் சமூக நலனிற்கு தொழில் வழங்குநரே பொறுப்பாகுமென்று 1984 ம் ஆண்டு 14 ம் இலக்கச் சட்டம் விதித்தது. தொழிலாளரிடையே காணப்பட்ட உயர்ந்த இறப்பு விகிதங்கள்,உடல்நலக் குறைவுகள் என்பவற்றை கவனத்திற் கொண்டு ஆகக்குறைந்த மருத்துவ வசதிகளாவது தொழிலாளர்களுக்கு செய்து கொடுக்கப்படுவதை இச்சட்டம் வலியுறுத்தியது.

சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படுவதையும் இச்சட்டம் கட்டாயமாக்கி இருந்தது. எனினும் தோட்ட முகாமையாளர்கள் இச்சட்டத்தின் விதிகளை அமுலாக்குவதில் உரிய கரிசனையை காட்டத் தவறி இருந்தனர். இதனால் இச்சட்டத்தை அமுல்படுத்திய பின்னரும் தொழிலாளர்களின் இறப்பு விகிதங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி நிலையினை அவதானிக்க முடியவில்லை.

தொழிலாளருக்கான மருத்துவ நலன் திட்டங்களை நிதிப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்கும்அரசாங்கமேபொறுப்பாகுமென்று தோட்டக் கம்பனிகள் தொடர்ச்சியாகவே வாதிட்டு வந்த நிலையில் 1880 ம் ஆண்டு 17 ம் இலக்க மருத்துவ தேவைகள் சட்டத்தின் கீழ் இப்பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. 1912 ம் ஆண்டு 9 ம் 10 ம் இலக்க மருத்துவ உதவிச்சட்டங்கள் முக்கியத்துவம் மிக்கனவாக

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# சனாதனம் ஓர் அலசல்

பேராசிரியர்
மு.நாகநாதன் எம்.ஏ.,எம்.எல்.,பிஎச்.டி.,டி.லிட்.

சனாதனத்திற்கு விளக்கம் அளிப்பவர்கள், சனாதனம் அழியாதது, சனாதனம் நிலையானது என்று வாதிடுகின்றனர். ஆனால், 21ஆம் நூற்றாண்டில் தகவல் தொழில் நுட்பப் புரட்சி உலகெங்கும் பரவி இருக்கின்ற இக்காலக் கட்டத்தில், மாறுதல்களின் பயணம்தான் இன்றைய உலகைக் கைப்பேசி வழியாக இணைத்திருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது. உலகின் மக்கள்தொகை 800 கோடியைத் தாண்டிவிட்டது. இந்தியாவின் மக்கள்தொகை 148 கோடியைக் கடந்துவிட்டது. சீனாவின் மக்கள்தொகை முதல் நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு 142 கோடியாக உள்ளது.



2000 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த மக்கள்தொகை, வாழ்நிலை, இயற்கை சூழல், நிலம், காற்று, நீர் ஆகியவற்றின் தன்மைகள் முற்றிலுமாக மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், தொழில் நுட்ப வளர்ச்சியாலும் மாறிக் கொண்டே வருகின்றன. எனவே, சனாதனம் நிலையானது என்பது வளர்ந்து வருகின்ற அறிவியலுக்கு முற்றிலும் எதிரான கருத்தாகும்.

தமிழ்நாட்டில் கீழடியில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சியின் புதிய தரவுகள் எவற்றிலும் கடவுள் சார்பு, மதச்சார்பு தன்மைகள் இல்லவே இல்லை என்பது உண்மையாகி விட்டது. கீழடி சான்றுகள் தமிழர் நாகரிகம் 3000 ஆண்டுகளுக்கு முன்னது என்பதை மெய்ப்பிக்கின்றன.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் கருத்து தமிழ்ப் பண்பினுடைய ஒரு தொடர்ச்சியே என்பதையும் உறுதி செய்கிறது. ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபிறகுதான் வேதங்களும், மனுசாத்திரங்களும், இதிகாசப் புராண கதைகளும் தமிழ் மண்ணில் திணிக்கப்பட்டன.

2000 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர், 'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்று தமிழர்கள் பின்பற்றிய அறத்தை வெளிப்படுத்தினார்.

திருக்குறளுக்கு உரை எழுதிய நாவலர் நெடுஞ்செழியன் தனது முன்னுரையில், பரிமேலழகர் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் எழுதிய திருக்குறள் உரையில் புகுத்தப்பட்ட ஆரியக் கருத்துகளை எடுத்து முன்வைத்துள்ளார். திருக்குறளின் உண்மைக் கூறுகள் மறைக்கப்பட்டுப் பிற்காலத்தில் புகுத்தப்பட்ட மனுக் கொள்கைகளை ஒட்டியே பரிமேலழகரின் உரை அமைந்துள்ளது என்பதற்குப் பல சான்றுகளையும் சுட்டியுள்ளார்.

"பிராமணன் முதல் வருணத்தால் ஆனதனாலும், பிரம்மாவின் முகமாகிய உயர்ந்த இடத்தில் பிறந்ததனாலும், எல்லா வருணத்தாருடைய பொருள்களையும் தானம் வாங்குவதற்குரிய தலைவனாகிறான்"(மனு த.சா.அ.1.சு.100)

"சூத்திரன் பிராமணர்களைத் திட்டினால், அவன் தாழ்ந்த இடமான காலில் பிறந்தவன் ஆகையால், அவன் நாக்கை அறுக்க வேண்டும்." (மனு த.சா.அ.8.சு.270).

"ஒரு பிராமணன் தன்னைப் புலால் உண்ண வேண்டும் என்று பிறர் கேட்டுக்கொள்ளும் போதும், விதிப்படி சிரார்த்தத்தில் வரிக்கப்பட்ட போதும், கொல்லப்பட்ட விலங்குகளின் இறைச்சியை உண்ணலாம்."

"அஜீ கர்த்தர் என்னும் முனிவர் 100 பசுக்களை வாங்கிக் கொன்று வேள்வி செய்து, தமது பசியைத் தீர்த்துக் கொண்டார். அப்படிச் செய்யும் அவருக்குப் பாவம் நேரிடவில்லை"(மனு த.சா.அ.10.சு.105).

"கொடிய குற்றம் செய்தாலும், பிராமணனைக் கொல்லாமலும் மற்ற எத்தகையத் துன்பத்திற்கு ஆளாக்காமலும், அவனுடைய பொருளை அவனுக்குக் கொடுத்து, அயலூருக்கு அனுப்ப வேண்டும்" (மனு த.சா.அ.8.சு.380)

"அரசனானவன், எத்தகைய குற்றத்திற்கும் பிராமணனைக் கொல்ல நினைக்கக் கூடாது" (மனு த.சா.அ.8.சு.381).



பேராசிரியர்
மு.நாகநாதன் எம்.ஏ.,எம்.எல்.,பிஎச்.டி.,டி.லிட்.

ஆண்டவனே சாதிகளைப் படைத்தான், தலையில் பிறந்தவன் பிராமணன், தோளில் பிறந்தவன் சத்திரியன், தொடையில் பிறந்தவன் வைசியன், காலில் பிறந்தவன் சூத்திரன்.

மேற்கூறிய கருத்துகள்அடிப்படையில்தான் சனாதனம் ஆதிக்க சமூகத்தினரால் உயர்ந்த கருத்து என்றும், மானுட நெறிகளைப் போற்றும் கருத்துகள் என்றும் சுட்டப்படுகிறது.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை – குறள் 1031

(உலகத்தார் பல தொழில்களைச் செய்தாலும், உணவின் காரணமாக, உழவுத் தொழிலையே தலையாய தொழிலாக ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்)

2000 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவர் சுட்டிய கருத்துகள் இன்றும் உலகில் நடைமுறையிலிருந்து வருகிறது. பொருளாதாரத்தில் தேசிய வருமானத்தைக் கணக்கிடுகிறபோது, வேளாண் தொழில் வருமானத்தை முதன்மைத் துறை என்றும், தொழில் துறையை இரண்டாம் நிலை என்றும் பணித்துறையை மூன்றாம் நிலை என்றும் குறிப்பிடுகிறார்கள்.

கொரோணா காலத்தில் எல்லாத் துறைகளும் முடங்கிய போது, வேளாண் துறை மட்டும் உழவர்களின் வழியாக உலகிற்கே உணவை அளித்தது. ஆனால், இப்படிப்பட்ட மனிதர்களுக்குத் தேவையான உணவை அளிக்கும் தொழிலைப் பற்றி சனாதனம் என்ன கூறுகிறது தெரியுமா?

'பயிர்த்தொழில் நல்ல தொழில் என்று நினைக்கிறார்கள். அந்தத் தொழில் பெரியோர்களால் மிகவும் இகழப்பட்டதாகும்' (மனு த.சா.அ.10.சு.84)

மனிதனையும், மனிதனுக்கு உணவைத் தரும் முதன்மைத் தொழிலான வேளாண் தொழிலை இழிவுபடுத்துவதுதான் என்றும் நிலையான கருத்தாக சனாதனம் முன்னிறுத்துகிறது.

தமிழ் மண்ணில் சார்வகம், பௌத்தம், சமணம் போன்ற மார்க்கங்கள் செழித்திருந்தன. அவை கடவுள், மறுபிறப்பு போன்ற வேத இதிகாச அடிப்படையில் அமைந்த சனாதனக் கருத்துகளை முழுமையாக எதிர்த்தன.

தமிழ் மண்ணில் சைவமும், வைணவமும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போற்றப்பட்டாலும், அவ்வப்போது இக்கருத்தியலில் காணப்பட்ட, தொன்றுதொட்டு கடைப்பிடிக்கப்பட்ட, தமிழ் மரபிற்கு எதிராகப் புனையப்பட்ட, புகுத்தப்பட்ட கருத்துகளைச் சித்தர்கள் பலர் எதிர்த்தவண்ணமே இருந்தனர்.



"இட்ட குண்டம் ஏதடா?
இருக்கு வேதம் ஏதடா" **(சிவவாக்கியர் 13)**
என்று பல நூறாண்டுகளுக்கு முன்பே சிவவாக்கியர் என்ற சித்தர் குரலெழுப்பினார்.

"நூறு கோடி ஆகமங்கள், நூறு கோடி மந்திரங்கள்,
நூறு கோடி நாள் ஓதினால் அது என்பயன்";
(அது எந்தப் பலனையும் தராது) **(சிவவாக்கியர் 140)**

"ஓதி வைத்த நூலிலே மயங்குகிறீர். மனு எரிக்க நாளு நாடுவீர்"(சிவவாக்கியர் 462)
"சாதியாவது ஏதடா? சாதி பேதம் பேசும் தன்மை என்ன தன்மையோ?" (சிவவாக்கியர் 46)

"பறைச்சியாவது ஏதடா? பணத்தியாவது ஏதடா?
இறைச்சித்தோல் எலும்பினும் இலக்கிட்டு இருக்குதோ
பறைச்சிபோகம் வேறதோ பணத்திபோகம் வேறதோ
பறைச்சியும் பணத்தியும் பகுந்துபாரும் உம்முள்ளே
**(சிவவாக்கியர் 38)**

"நட்டகல்லைத் தெய்வம் என்றே நாலு புட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணமுணென்று சொல்லு மந்திரம் ஏதடா
நட்டக் கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்"
**(சிவவாக்கியர் 494)**

மேலும், சிவவாக்கியர் 508 பாடலில் "கட்டை, கல், மட்டை, மஞ்சள், சட்டை, சாடி இவைகளில் பரம்பொருள் இல்லை, வெட்ட வெளியதன்றி மற்றுவேறு தெய்வமில்லை" என்று உரைக்கிறார்.

**ஆடுபாம்பு சித்தர்** -
"சதுர்வேதம், ஆறுவகைச் சாத்திரம் பல தந்திரம், புராணங்களைச் சாற்றும் ஆகமம்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இந்திய, சீன இழுபறியால்

# பன்னாட்டு விமானங்களை இழக்கும் நேபாளம்

தமிழில்: **ஜெயந்திரன்**

செவ்விளநீர் நிறமான அந்தப் பயணிகள் விடுதியைத் தூரத்திலிருந்தே நன்றாகப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால் அந்த விடுதியின் சொந்தக்காரரான பிஷ்ணு சர்மாவைப் பொறுத்தவரையில் அந்த விடுதியில் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.



அவரது விடுதி கௌதம புத்தரின் பிறப்பிடமான லும்பினி *(Lumbini)* என்ற இடத்தில் அமைந்திருக்கிறது. அந்த விடுதிக்கு முன்னால் பரந்து விரிந்திருக்கும் மலைகளின் காட்சி பார்ப்பவர்களை மெய்மறக்கச் செய்யும்.

அதே நேரம், நேபாளத்துக்கு அருகில் இருக்கும் அதன் இராட்சத அயல்நாடுகளான இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கு இடையேயுள்ள உறவில் ஏற்பட்டிருக்கும் விரிசலும், அங்கே வருகின்ற உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறாததற்கான காரணங்களில் ஒன்று எனக் கருதப்படுகிறது.

லும்பினி அபிவிருத்தி அமைப்பின் *(Lumbini Development Trust)* அறிக்கையின் படி, 2022ம் ஆண்டில் ஒரு மில்லியன் எண்ணிக்கையிலான பயணிகள் லும்பினிக்கு வந்திருந்தார்கள். இவ்வாறு உல்லாசப்பயணிகள் பெரும் எண்ணிக்கையில் வந்த காரணத்தினாலே தான், 76 மில்லியன் டொலர்களை முதலிட்டு, 'கௌதம் புத்தர் பன்னாட்டு விமான நிலையத்தை' *(Gautam Buddha International Airport)* அந்த அமைப்பு கட்டியிருக்கிறது. கடந்த வருடம் மே மாதம் குறிப்பிட்ட விமான நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

லும்பினிக்கு வரும் பயணிகளில் பெரும்பாலானோர் உள்நாட்டைச் சேர்ந்தவர்கள். பயணிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் அண்டை நாடான இந்தியாவிலிருந்து வருகிறார்கள். 'பைரவ விமானநிலையம்' *(Bhairahawa Airport)* என்றும் அழைக்கப்படும் இந்த முனையத்தினூடாக *(Terminal)* 250 கிலோமீற்றர்களுக்கு அப்பால் உள்ள நேபாளத்தின் தலைநகரான கத்மண்டுக்குப் போகாமலே *(Kathmandu)* பயணிகள் நேரடியாக அங்கு வரமுடியும்.



ஆனால் உல்லாசப்பயணிகள் பெரும் எண்ணிக்கையில் அங்கு வருவார்கள் என்ற எதிர்பார்ப்பு ஏனோ நிறைவேறவில்லை. பயணத்துறை நிபுணர்களின் கருத்துப்படி, விமான நிலையம் திறந்துவைக்கப்பட்ட நேரத்தில், விமான நிறுவனங்களுக்கு அது தொடர்பாகப் போதிய விளம்பரம் செய்யப்படவில்லை என்பதுடன் பன்னாட்டு விமான நிறுவனங்களுக்கு போதிய சலுகைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதும் ஆகும்.

"முன்னரை விட அதிகமான பன்னாட்டு விமானங்கள் அங்கு வரும் என்று சொல்லி உல்லாசப்பயணக் கட்டமைப்பை அபிவிருத்தி செய்யுமாறு அரசாங்கம் எங்களைக் கேட்டுக்கொண்டது. ஆனால் எனது விடுதியின் மூன்றில் இரண்டு பகுதி வெறுமையாகவே இருக்கிறது. நான் எடுத்த கடன்களை மீளச்செலுத்துவதற்கு நான் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறேன். எனது கடன் மில்லியன் கணக்கிலானது" என்று சர்மா மேலும் தெரிவித்தார்.




ஹொலிடே ஸ்ரார் ஹொட்டேலைப் *(Holiday Star Hotel)* போலவே லும்பினியில் உள்ள ஏனைய வர்த்தகர்களும் உல்லாசப்பயணிகள் அங்கு படையெடுத்து வருவார்கள் என்றே நம்பினார்கள். பைரவா விமான நிலையத்திலிருந்து பன்னாட்டு விமானப்பயணங்கள் மேற்கொள்ளப்படுமாக இருந்தால், உல்லாசப்பயணிகள் குறிப்பாக வெளிநாட்டுப் பயணிகள் அங்கே அதிகம் வருவார்கள் என்று பயணத்துறை நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். தமது வான்வெளியினூடாக மேற்குத்திசையை நோக்கி விமானங்கள் பயணிக்க பெரிய பயணிகள் விமானங்களுக்கு டெல்லி அனுமதி அளிக்கவில்லை என்று நேபாளத்திலுள்ள அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். அதன் பொருள் என்னவென்றால் இந்தியாவிலிருந்து கௌதம் விமானநிலையத்திற்கு விமானங்கள் பறக்க முடியாது என்பதாகும். இந்திய வான் வெளியில் பறக்க அனுமதி இருக்குமானால், விமானப்பயணங்கள் குறுகியதாகவும் மலிவானதாகவும் இருக்கும். சீனாவின் வடமேற்கு குடிமக்கள் விமானப்பயணங்களுக்கான விமான நிலையத்தினால் கௌதம் விமானநிலையம் கட்டிக் கொடுக்கப்பட்டதையும் இந்தியா விரும்பவில்லை என்று நேபாளத்திலுள்ள சிலர் நம்புகிறார்கள்.

மேலும் இந்த விமானநிலையத்தின் அமைவிடம் இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையே உள்ள எல்லைக்கு அருகாமையில் அமைந்திருக்கிறது. அந்த அமைவிடத்துக்கு மேற்குப் புறமாகத் தான் ஏசியன் நிறுவனத்துக்குச் சொந்தமான இரண்டு இராட்சத உலங்குவானூர்திகள் கடந்த டிசம்பர் மாதம் விபத்துக்குள்ளாகியிருந்தன. பன்னாட்டு விமானப் பயணங்களுக்கென இந்த விமான நிலையம் திறந்துவைக்கப்பட்ட ஏழு மாதத்திற்குள்ளே இந்த விபத்துகள் நடைபெற்றிருந்தன.

2020ம் ஆண்டு, இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே நிகழ்ந்த முக்கிய சண்டையில் 20 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். தெளிவாக வரையறை செய்யப்படாமலும், துல்லியமாக எல்லைகள் குறிக்கப்படாமலும் இருக்கும் உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு *(Line of Actual Control - LAC)* இரு நாடுகளுக்கும் இடையே இருக்கும் கருத்துவேறுபாட்டுக்கான முக்கிய காரணமாகும்.

இந்த எல்லை அமைந்திருக்கும் இடங்களில் ஆறுகள், ஏரிகள், பனியால் மூடப்பட்ட இடங்கள் போன்றன காணப்படுவதால், இந்த எல்லைக்கோடு எப்போதும் மாற்றமடையலாம். உலகின் இரு பெரும் இராணுவங்களைச் சேர்ந்த சிப்பாய்கள் அங்கு அடிக்கடி நேருக்கு நேர் எதிர்கொள்வதுண்டு. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், சீன அதிபர் ஷீ ஜின்பிங்கிக்கும் இடையே உள்ள உறவில் இருக்கின்ற இழுபறி நிலை குறிப்பிட்ட எல்லைப்பிரதேசத்தில் பிரதி



பலிப்பதைக் காணக்கூடியதாகவிருக்கிறது.

இரு நாடுகளுமே அணுவாயுத வல்லமையைக் கொண்டிருப்பதனால், இரு நாடுகளும் இழப்பதற்கு அதிகமாகவே இருக்கின்றன என்ற காரணத்தினால் மேற்கொண்டு நகர்வதற்கு இருக்கின்ற ஒரே வழி பேச்சுவார்த்தை மட்டுமே என்பதை அவதானிகள் தெரிவிக்கிறார்கள். இந்த இரு நாடுகளும் இதுவரை ஒரேயொரு தடவை மட்டும் போரில் ஈடுபட்டிருக்கின்றன. *1962* அந்தப் போர் மூண்டபோது, இந்தியா மிகவும் அவமானத்துக்குரிய வகையில் தோல்வியைத் தழுவியிருந்தது. மிக நீண்ட காலமாக நேபாளத்திலிருந்து வெளிநாடுகளுக்குப் பயணிக்கக்கூடிய ஒரேயொரு விமானநிலையமாக கத்மண்டு விமானநிலையமே இருந்துவந்தது. கத்மண்டு விமானநிலையத்துக்கு வருகின்ற விமானங்களைக் குறைத்து, கௌதம் விமானநிலையத்தினூடான விமானப்பயணங்களை அதிகரிக்கும் திட்டம் ஏற்கனவே அங்கு இருந்தது. கத்மண்டு விமான நிலையத்தினூடாக விமானப்பயணங்கள் அதிகமாக இடம்பெறுவதனால் அங்கு நெரிசல் அதிகமாக இருக்கிறது. *2015*ம் ஆண்டில் அங்கு நிகழ்ந்த பாரிய நிலவதிர்வின் காரணத்தால் விமானநிலையம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மூடப்பட்டிருந்தது.

'அன்னபூர்ணா மலைத்தொடரின்' *(Annapoorna mountains)* அழகைப் பார்த்து இரசிக்கக்கூடிய போக்காரா *(Pokhara)* எனும் இடத்தில் நேபாளத்தின் மூன்றாவது பன்னாட்டு விமான நிலையம் அமைந்திருக்கிறது. சாகச விளையாட்டுகளுக்கு அந்த இடம் பெயர்பெற்றிருந்தது. பைரவா விமான நிலையத்தைப் போன்று இந்த விமானநிலையமும் பிரச்சினைகளைச் சந்திக்கின்றது. சீனாவிடமிருந்து பெறப்பட்ட *215* மில்லியன் டொலர்களின் உதவியுடன் கட்டப்பட்ட இந்த விமான நிலையத்தில், இதுவரை எந்த பன்னாட்டு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

**தனது சிங்கள ... தொடர்ச்சி ...**

இணைந்து கொண்டவர்கள் நீங்கள் குறிப்பிட்டது போன்று கட்சி ஆதரவாளர்கள் தொண்டர்கள் என கலந்து கொண்டிருந்தார்கள் உண்மையாகவே ஒரு தமிழ் இன உணர்வுடன் அரசாங்கம் எவ்வளவு தூரம் தமிழ் மக்களைப் பாதிக்க கூடிய வகையில் இந்த அரசாங்கத்தின் நீதி துறை எவ்வாறு செயல்படுகிறது என்று வெளி உலகிற்கு காட்ட வேண்டும் என்று உணர்வு ரீதியாக எவ்வளவு மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள் என்று ஒரு கேள்வி இருக்கிறது

நாங்கள் இந்த போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது காலை 09 மணிமுதல் 10 மணிவரை அதற்கு முன்னதாக நாங்கள் இந்த நேரம் வேலை நிறைந்த நேரம் என முன்பே எண்ணி இருந்தோம் ஆனாலும் கூட இந்த போராட்டத்தில் பலர் கலந்து கொண்டிருக்க முடியும் ஆனால் இந்த போராட்டத்தில் மாத்திரம் அல்ல தொடர்ச்சியாக நடைபெற்று வரும் போராட்டங்களிலும் சரி மக்களின் பங்குபற்றல் என்பது மிக மிக குறைவானதாகவே உள்ளது ஆகவே அவ்வாறான நிலை மாற்றப்பட வேண்டும் தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளுக்காக தாங்களாக முன்வந்து போராட்டங்களில் இணைந்து கொள்ளாவிட்டால் இலங்கை அரசாங்கமும் சரி ஏனைய நாடுகளும் சரி அதனுடைய வீரியத்தை உணர மாட்டார்கள் என்பது நிதர்சனமான உண்மை

நேற்றைய தினம் நடைபெற்ற கூட்டத்தில் இந்த விடயம் ஆராயப் பட்டிருக்கிறது ஆகவே இது தொடர்பாக கிராம மட்டங்களில் மக்கள் மட்டத்தில் கூட்டங்கள் போட்டு இது தொடர்பாக தெளிவு படுத்தப்பட வேண்டும் என்று பேசப்பட்டிருக்கிறது நான் நம்புகிறேன் அது தொடர்பாக அடுத்தடுத்த கூட்டங்களில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அக்கறை எடுத்து செயற்படவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்

**நீதிபதி மீதான அச்சுறுத்தல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என அனைத்துக் கட்சிகளுமே கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. அவ்வாறு சுயாதீனமான விசாரணை ஒன்று நடைபெறும் என எதிர்பார்க்க முடியுமா?**

இலங்கை அரசாங்கம் இது தொடர்பாக ஒரு விசாரணை குழுவை நியமித்தால் அரசாங்கத்தை , நீதி சேவை ஆணைக் குழுவை , நீதி அமைச்சை அவர்கள் மீது புனிதப்படுத்தலில் குற்றங்கள் இல்லை என்ற தோற்றங்கள்தான் நிச்சயமாக தோற்றுவிக்கப்படும் ஏற்கனவே பாராளுமன்றத்தில் நீதி அமைச்சர் பேசுகின்ற பேச்சும் அதனைத்தான் வெளிப்படுத்தி இருக்கிறது பாராளுமன்றத்தில் சில பேச்சுக்களும் அவ்வாறுதான் உள்ளது ஆகவே புதிதாக ஒரு விசாரணை குழுவை போட்டு அவர்கள் விசாரித்து அதன் ஊடாக ஒரு ஆக்கபூர்வமான விடயத்திற்கு வருவார்கள் என நான் எதிர் பார்க்க வில்லை

உங்களுக்கு தெரியும் இந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் விஜயதாசபச்ச, கருதினால் மல்கம் றஞ்சித் மைத்திரிபால சிறிசேன கருத்துகளை வெளிப்படுத்தினார்கள். இப்போது அனைவரும் பின்வாங்கி விட்டார்கள் ஏன் என்றால் அவ்வாறான ஒர விசாரணை கோரப்பட்டால் யுத்தக் குற்றம் தொடர்பான விசாரணைகளை தமிழ் மக்கள் வற்புறுத்துவார்கள். ஆகவே நாங்கள் இவ்வாறான விசாரணைக்கு போக கூடாது என்று கூறுகின்றார்கள் ஆகவே அவர்களை பொறுத்தவரையில் தமிழ் ஆக்களுக்கு ஒரு நீதி கிடைக்க கூடாது என்பதில் மிக தெளிவாக இருக்கிறார்கள் சர்வதேச விசாரணை நோக்கி எந்தவொரு தேவைக்காகவும் சர்வதேச விசாரனை நோக்கி போக மாட்டார்கள் என்பதுதான் ஜனாதிபதி ஜேர்மனில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசியது அதனை மிக தெளிவாக காட்டுவதனை நாங்கள் பார்க்கக்கூடியதாகவிருக்கும்.

**நீதிபதிக்கான அச்சுறுத்தல் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கும் தமிழ்க் கட்சிகள் கொண்டு சென்றுள்ளன. இவ்விடயத்தில் சர்வதேச சமூகம் உறுதியான செயற்பாடுகள் எதனையாவது முன்னெடுக்கும் என எதிர்பார்க்க முடியுமா?**

நான் ஏற்கனவே கூறியது போன்று தமிழ் தேசிய கூட்டணி தமிழரசு கட்சி விக்கினேஸ்வரன் எல்லோரும் சேர்ந்து ஒரு அறிக்கை தயார் செய்து இருக்கிறோம் அந்த அறிக்கை மிக விரைவில் சர்வதேசங்களுக்கு கையளிக்கப்படும் அதில் நாங்கள் இது தொடர்பான விசாரணைகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் இலங்கை நிலவரம் எவ்வாறு உள்ளது என்பதனை தெளிவு படுத்தி இருக்கிறோம்

ஆகவே குறைந்த பட்சம் சர்வதேச சமுகத்திற்கு இலங்கை நீதித்துறை தொடர்பாக ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த எவ்வாறு இலங்கை நீதித்துறை விஷயங்களை கையாளுகிறது என்பதை புலப்படுத்தத்தான் ஒரளவுக்கு பதிவாகி இருக்கும் என்று நம்புகிறோம் எங்களைப் பொறுத்தவரையில் உலக நாடுகள் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து நீதி கிடைக்காது என்பதை இன்று இந்த போராட்டம் கூடாக கொண்டு சேர்க்க முயற்சி செய்திருக்கிறோம்

அதன் ஒரு படியாக அடுத்த கட்ட போராட்டம் பற்றியும் யோசித்திருக்கின்றோம் இன்று அல்லது நாளை மீண்டும் ஒன்று கூடி பேசி அது தொடர்பான ஆக்க பூர்வமான முடிவுகளை எடுப்பதற்கும் ஆலோசித்துள்ளோம் ஆகவே இந்த விசாரணைகள் என்பது சர்வதேச சமூகம் ஒரு சரியான கணக்கில் எடுத்து இலங்கை தொடர்பான விடயங்களை கையாள வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை

**இந்த விவகாரத்தை தமிழ்க் கட்சிகள் கையாளும் முறை தொடர்பில் உங்களுடைய கருத்து என்ன? இதனை இன்னும் ஆரோக்கியமான முறையில் தமிழ்க் கட்சிகள் கையாண்டிருக்க முடியுமா?**

நிச்சயமாக கையாள முடியும் என்று தான் நம்புகிறேன் இப்பொழுது என்னை பொறுத்தவரையில் நீதிபதி திரு. சரவணராஜா என்பவர் அச்சுறுத்தப் பட்டிருக்கிறார் அவரது பதவியில் இருந்து விலகி இருக்கிறார் என்பது ஒன்று அது இலங்கையின்னுடைய கரும் புள்ளியாக இருக்கின்றது அது மாத்திரமல்ல இருக்க கூடிய பிரச்சனை என்பது தமிழ் மக்களுக்கு இன் நாட்டில் நீதி கிடைக்குமா இன்னும் குறிப்பாக கூறுவதென்றால் தமிழ் நீதிபதிகள் சட்டங்களுக்கு உட்பட்டு நீதித்துறையின் சகல கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு அவர்கள் சில தீர்ப்பு வழங்குகின்ற பொழுது அந்த தீர்ப்புகள் மீறப்படுகின்றன

உதாரணமாக குருந்தூர் மலை தீர்ப்புகள் மீறப்பட்டிருக்கிறது இராணுவம் அதனை மீறி இருக்கிறது காவல் துறையினர் அதனை மீறி இருக்கின்றனர் புத்த பிக்குகள் அதனை மீறி இருக்கின்றனர் இவ்வாறான நிலையில் அரசாங்கம் இதில் சரியான முறையில் தவறி இருக்கிறது. ஆகவே எமது குற்றச்சாட்டு என்பது இந்த அரசாங்கத்திடம் இருந்து இந்த நீதித்துறையிடம் இருந்து தமிழ் ஆக்களுக்கு எந்தவிதமான நீதியும் கிட்டாது என்பதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் செல்வதற்காக இந்த திட்டத்தை நாங்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் தவிர இந்த அரசாங்கம் ஒரு விசாரணை குழுவை வைத்து சரி செய்துவிடும் என்பது கிடையாது ஆகவே தமிழ் கட்சிகள் ஒன்று சேர்ந்து இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து சரியாக கையாள வேண்டும் அந்தவகையில் தான் நாங்கள் அதனை இப்போது கையாள ஆரம்பித்து உள்ளோம் ஆனால் சட்டத்தரணிகளை பொறுத்தவரையில் அவர்கள் சட்டத்துறையில் அவர்களுக்கு மேல் நீதிபதிக்கு இவ்வாறு நடந்து கொண்டது அவர்கள் நீதித்துறைக்கு மேலாக நடந்து கொண்டதாக வெறுமனே அவர்கள் பார்க்க கூடும்

சட்டத் துறையினரை பொறுத்தவரையில் அவை சரியான கருத்தாகவும் இருக்க கூடும் அதில் நாங்கள் தலையிட முடியாது ஆனால் எம்மை பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கு ஒட்டுமொத்தமான நீதியும் மறுக்கின்ற செயற்பாடாகத்தான் இந்த விடயத்தைப் பார்க்கின்றோம் இலங்கையினுடைய நீதிமன்றத்தின் கரும்புள்ளியாகத்தான் இந்த பதவி விலகலை பார்க்கின்றோம்.

**நீதிபதி விவகாரம் சர்வதேச அரங்கில் இலங்கையை எந்தளவுக்குப் பாதிக்கும்?**

இப்போது இலங்கையில் பல்வேறு கொலைகள் நடந்துள்ளது உங்களுக்கு தெரியும் மூதூரில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த 18 தொண்டு நிறுவன ஊழியர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள் அதேபோல் இலங்கையில் பல் வேறு பட்ட கொலைகள் நடந்துள்ளது இவைகள் எல்லாம் சர்வதேசத்திற்கு தெரியாமல் இல்லை.

அனைத்தும் தெரிந்த விஷயம் அதே போல் இலங்கை அரசாங்கம் UNHR முன்வைத்த பல விஷயங்களை மறுதலித்திருக்கிறது ஏற்றுகொள்ளவில்லை விசாரணைகள் நடைபெறவில்லை என்பது சர்வதேச சமூகம் அறிந்த விஷயம் ஆகவே இப்போது இந்த நீதித் துறையின் கேவலங்களை நாங்கள் சர்வதேசத்திற்கு கொண்டு செல்ல விரும்புகிறோம் அது கொண்டு செல்லப்பட்டும் இருக்கிறது தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான எதிர்ப்பை இதற்குக் காட்டிக் கொண்டு இருக்கிறோம் ஆகவே சர்வதேச சமூகம் எல்லாவற்றுக்கும் உடன் பதிலளிக்கும் என்று தெரியாது ஆனால் நிச்சயமாக காலநேரம் கூடி வருகின்ற பொழுது சர்வதேசம் நிச்சயமாக கவனத்தில் எடுத்து கொள்ளும் என்று நம்புகின்றோம் ஆகவே அந்தவகையில் மக்கள் யோசிக்கலாம் நொந்துபோய் இருக்கிறார்கள் யுத்தம் முடிந்து 14 வருடம் முடிந்தும் நீதி கிடைக்கவில்லை என்று கவலையில் இருக்கலாம்

இப்போது இந்த பிரச்சனை எங்களுடைய கைகளில் மாத்திரம் இல்லை சர்வதேச சமூகத்தின் கைகளில் இருக்கிறது என்ற அடிப்படையில் தொடர்ச்சியாக எங்களுடைய எதிர்புக்களை அரசாங்கத்தின் பொய் முகங்களை அவர்களுக்கு தெளிவாக காட்டவேண்டும் அதற்காக நாங்கள் தொடர்ச்சியாக காட்டவேண்டும் அவ்வாறு செயல் படுவதால் அனைத்தும் ஒன்று திரண்டு தமிழ் மக்களுக்கான ஒரு சாதகமான சூழலை ஏற்படுத்தும் என்றுதான் நான் கருதுகிறேன்

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உள்ளிட்ட எந்த விவகாரத்துக்கும் சர்வதேச விசாரணை இடம்பெறாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். அவரது இந்த அறிவுப்பு தொடர்பில் உங்களுடைய கருத்து என்ன?**

நானும் அதனை பார்த்திருந்தேன் அது வெறும் அறிவிப்பு மாத்திரம் அல்ல அவருடைய பதற்றம் முகத் தோற்றம் உணர்சிவசப்பட்டு நடந்து கொண்ட விதம் கேள்விக்கு பதிலளிக்க மறுத்தது என அனைத்தையும் நான் பார்த்திருந்தேன் ஜனாதிபதி அவர்கள் தனது சிங்கள முகத்தை அவர் ஒரு பௌத்த இனவாதி என்று காட்டி வருகின்றார் அது மாத்திரமல்ல அடுத்து வரக்கூடிய ஜனாதிபதி தேறுதலுக்கு நானும் ஒரு முற்று முழுதான சிங்களவன் என்ற முகத்தை காட்ட விரும்புகிறார் என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது ஆகவே அந்த கருத்து என்பது நிச்சயமாக சிங்கள மக்களின் ஏகுவித்த இனவாத கருத்தை அவர் பிரதி பலித்து இருக்கிறார் சர்வதேசம் சார்ந்த கேள்விகளை ஊடகம் சார்ந்து கேள்வி

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## கிழக்கு மாகா... தொடர்ச்சி ...

செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் அச்சுறுத்தும் வகையில் விசாரணைக்கு உட்படுத்துவதென்பது அரசாங்கம் எதையோ திசைதிருப்புவதற்காக செய்யப்படுகின்ற நகர்வாகவே பார்க்கின்றேன். எனவே ஜனநாயக மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தும் நாகரிகமற்ற செயற்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும் என என்றார்.

இதேபோன்று கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட காணி அபகரிப்புகள், படுகொலைகள், கடத்தல்கள், அத்துமீறிய குடியேற்றங்கள் என பல்வேறு விடயங்கள் குறித்தும் சனல்4 விவகாரம் வெளிவந்த பின்னர் கிழக்கில் கடந்த காலத்தில் ஒட்டுக்களினால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் குறித்து வெளிப்படையாக பேசிவரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் வி.லவகுமார் கடுமையான முறையில் அச்சுறுத்தப்பட்டுவருகின்றார்.

கடந்த காலத்தில் விடுதலைப்புலிகளை நினைவுகூர்ந்தார் என்ற ரீதியில் சுமார் ஒரு வருடம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த லவகுமார் பின்னர் மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவுதினம் அனுஸ்டித்தமைக்கு எதிராக பல தடவைகள் பயங்கரவாத தடுப்பிரிவினரால் விசாரணைகளுக் குட்படுத்தப்பட்டவராகவுள்ளார்.

இவ்வாறான நிலையில் அண்மையில் சனல்4 வெளியிட்ட தகவல்களின் பின்னர் பிள்ளையான் குழுவினால் கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட பல படுகொலைகள் மற்றும் தீவுச்சேனை என்னும் வதைமுகாம் தொடர்பான பல தகவல்களை வெளிப்படுத்திவந்த நிலையில் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அவரது வீட்டுக்கு வந்த ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நபர்களினால் அவர் மிரட்டப்பட்டுள்ளதுடன் எந்த விடயம் தொடர்பிலும் கதைக்ககூடாது எனவும் இல்லையென்றால் கொலைசெய்யப்படுவீர்கள் என்ற வகையில் அவர் மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் கடந்த காலத்தில் கிழக்கில் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு செயற்பாடுகள் குறித்து பேசுவதற்கு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் அச்சமடையச்செய்யும் சூழ்நிலையானது மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றது. கடந்த காலத்திலும் மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினைகள் குறித்து தொடர்ச்சியான செய்திகளை எழுதிய ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்ட நிலையில் சிவில்சமூக செயற்பாட்டாளர்களும் அச்சுறுத்தப்பட்டனர்.

எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக சந்தேகிக்கப்படும் காணி அபகரிப்புகள், விகாரை அமைக்கும் நடவடிக்கைகள், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தொடர்பில் போராட்டங்கள் நடைபெறுவதையும் அவற்றிற்கு எதிரான குரல்கள் மேல் எழுவதையும் தடுப்பதற்கானசெயற்பாடுகள் மிகவும் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான அழுத்தங்களை தடுப்பதற்கான நடவடிக்கைகளை புலம்பெயர்தேசத்தில் உள்ளவர்களும் வடகிழக்கில் உள்ள தமிழ் தேசிய அரசியல்சக்திகளும் ஆதரவு வழங்கவேண்டும். ஐநா மனித உரிமைகள் மாநாட்டில் இவை தொடர்பில் அதிகம் பேசப்பட்டு எங்களுக்குள்ள குரல்கள் நசுக்கப்படுவதை தடுக்கமுன்வரவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைக்கின்றோம்.

• • •

## சனாதனம் ... தொடர்ச்சி ...

*விதவிதமான வேறு நூல்களும்*
*வீணான நூல்கள் என்று ஆடுபாம்பே"*

*"சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்*
*சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்"*
*(123)*

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு – **குறள் 80**

*(அன்புடையவர்களே உயிருடையவர்களாகக் கருதப்படுவார்கள். அன்பில்லாதவர்கள் இறந்த பிணம் போன்று எண்ணப்படுபவர்கள்- நாவலர் உரை)*

அறிவுடைமை, அன்புடைமை, ஆள்வினையுடைமை, அடக்கமுடைமை, ஊக்கமுடைமை, பண்புடைமை, பொறையுடைமை போன்ற பல அதிகாரங்களில் மானுடத்தை உயர்த்தும் பண்புகளும், மனித வாழ்வியலில் கடைப்பிடிக்க வேண்டிய உயர் நெறிகளும், ஏற்றத்தாழ்வுகளை நீ;க்கும் முறைகளும் திருக்குறளில் நிறைந்து காணப்படுகின்றன. ஆனால், என்றும் நிலையானது, அழியாதது என்று கூறப்படும் கருத்துகள், இன்றைய அறிவியலுக்கு முற்றும் பொருந்தாத, மனிதனை மனிதனே தாழ்த்தும் பிற்போக்குத்தனமான கூறுகளைச் சனாதனம் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்.

காலந்தோறும் தமிழக மண்ணில் வள்ளுவர், சித்தர்கள் தொடங்கி வள்ளலார் வரை வேத, ஆகம கருத்துகளை முழுமையாக எதிர்த்துள்ளனர். தமிழ் இலக்கியங்களில், காப்பியங்களில் சனாதனம் என்ற சொல் காணப்படவில்லை.

இன்றைக்கு ஆதிக்கச் சக்தியினரின் கைகளில் ஆட்சியியலும், ஊடகங்களும், பெருமுதலாளிகளும் சிக்கியிருப்பதால் அறிவியலுக்குப் புறம்பான, பகுத்தறிவிற்கு எதிரான, வருணாசிரமம் என்னும் அடுக்குமுறை சாதியத்தை வலியுறுத்தும் கருத்தைச் சனாதனம் என்ற போர்வையில் வலியுறுத்துகின்றனர். இதை 19ஆம் நூற்றாண்டிலேயே உணர்ந்த வள்ளலார் முதன் முதலாக ஆறாம் திருமுறையில் சனாதனம் என்கிற சொல்லாடலைப் பயன்படுத்தியுள்ளார். அதனுடைய தீய விளைவுகளையும் கடுமையான கடுமையான முறையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

*மதித்த சமயமத வழக்கெல்லாம் மாய்ந்தது*
*வருணாச் சிரமம்எனு மயக்கமும் சாய்ந்தது*
***(ஆறாம் திருமுறை – 4503)***

*குறித்த வேதாகமக் கூச்சலும் அடங்கிற்று*
*குதித்த மனமுருட்டுக் குரங்கு முடங்கிற்று*
*(ஆறாம் திருமுறை – 4504)*

*பொதுநிலை அருள்வது பொதுவினில் நிறைவது*
*பொதுநலம் உடையது பொதுநடம் இடுவது*
***(ஆறாம் திருமுறை – 5170)***

இதன் காரணமாகத்தான் கேரளாவின் நாராயண குரு ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்காகக் களம் அமைத்துப் போராடினார். இது ஒரு சனாதன எதிர்ப்பு போராட்டமாகவே கருதப்படுகிறது.

தமிழ் நாட்டில் தந்தை பெரியார் 60 ஆண்டுகாலப் பொது வாழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட சொற்பொழிவுகளில் மனு சாத்திரம், வேதம், இதிகாசம், புராணம், பகவத்கீதை உட்படப் பல நூல்களில் சாதிப் பிளவை ஊக்குவிப்பதையே முதன்மையான கருத்தியலாகப் புகுத்தப்பட்டுள்ளது. இதைத்தான் தந்தை பெரியார் சனாதனக் கொடுமை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அறிஞர் அண்ணா "சிவாஜி கண்ட இந்து இராஜ்ஜியம் அல்லது சந்திரமோகன்" என்ற நாடக நூலில் பல வெற்றிகளைப் பெற்ற மாவீரன் சிவாஜிக்கு மராட்டியப் பார்ப்பனர்கள் மகுடம் சூட்ட மறுக்கிறார்கள். சிவாஜி என்ற மாவீரனைச் சூத்திரன் என்று அழைத்து இழிவுபடுத்தினார்கள். பட்டம் சூட்டுவதற்குப் பல இலட்சம் மதிப்புள்ள செல்வத்தைப் பெற்றுக்கொண்டு கங்கையிலிருந்து வந்த காகபட்டர் என்கிற பார்ப்பனர், சிவாஜியைச் சத்திரியன் என்று அழைத்துப் பட்டம் சூட்டுகிறார். இந்த ஆதிக்கச் சமுதாயத்தினர் நினைத்தால் யாரையும் எப்படியும் நிறம் மாற்றலாம் என்ற ஒரு ஆதிக்க மனப்பான்மை இன்றும் தொடர்வது மானுடக் குலத்திற்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதியாகும்.

இதனால்தான் அண்ணல் அம்பேத்கர், இந்து மதவாதமும், சனாதனமும் இந்தியாவில் ஜனநாயகக் கூறுகளைச் சிதைத்துவிடும் என்று எச்சரிக்கை செய்தார். இதற்கு மணிப்பூரில் தொடரும் கலவரங்களே நிகழ்கால சான்றுகளாக அமைகின்றன.

'இந்தியாவில் ஏன் ஜனநாயகம் வளரவில்லை? இதற்கான பதில் எளிது. இந்து மதம் சகோதரத்துவத்தைக் கற்பிக்கவில்லை. அதற்குப் பதிலாக சமூகத்தைச் சாதி வர்ணங்கள் அடிப்படையில் பிளவைக் கற்பிக்கிறது. வகுப்புணர்வைத் தனியாக நிலைபெறச் செய்கிறது. இத்தகைய அமைப்பில் ஜனநாயகத்திற்கு இடமில்லை. இந்தச் சமூக அமைப்பு விபத்தின் காரணமாக ஜனநாயகத்தை இழக்கவில்லை. ஜனநாயகம் இருக்கக்கூடாது என்பதற்காக வடிவமைக்கப்பட்டது" *(Why did democracy not grow in India? The answer is simple. The Hindu religion does not teach fraternity. Instead, it teaches the division of society into classes or varnas and the maintenance of separate class consciousness. In such a system where is the room for democracy? The Hindu social system is undemocratic not by accident it is designed to be undemocratic. "Riddles in Hinduism – Dr Babasaheb Ambedkar - Writings and Speeches, Vol, IVp.285)*

சனாதனம் ஏற்றத்தாழ்வைக் கற்பிக்கும் ஒரு பழமைவாத, பிற்போக்குத்தனமான கருத்தியல். இன்று இந்தியாவில் காணப்படும் பெருகி வரும் வறுமை, ஏற்றத்தாழ்வு, வேலையின்மை, கல்வியின்மை, குழந்தைகள் வளர்ச்சி குன்றிய நிலை ஆகிய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளை உலகளவிலும், இந்திய அளவிலும் பல ஆய்வறிக்கைகள் அம்பலப்படுத்தி வருகின்றன. இவற்றை மறைப்பதற்காக சனாதனத்தை ஒரு கேடயமாக ஆதிக்கச் சக்தியினர் பயன்படுத்துகிறார்கள் என்பதும் உண்மை.

• • •

## சிறீலங்கா - இரண் ... தொடர்ச்சி ...

காணப்படுகின்றது. எனவே பொதுமக்களின் இறுதி நம்பிக்கையான நீதித் துறையையும், பொதுமக் களையும் காப்பாற்ற முடியாது நாடொன்று என்ன இலட்சணத்தில் தன்னை இரண்டாம் தர நாடாகவாவது எடுத்துக் கொள்ளுங்கள் எனக் கோபப்படமுடியும்?

இப்படியாக இந்நாடு மூன்றாந்தர நிலையில் இருக்கக்கூட பொருத்தமற்ற அனைத்துத் தளங்களிலும் புறையோடிப்போயிருக்கின்றன. இந்தப் பத்தியின் படியே சிந்தித்தால் சிறீலங்காவின் தொட்டவைகள் அனைத்துமே 15 ஆம் நூற்றாண்டு மனிதர்கள் பயன்படுத்தக்கூடத் தகுதியற்றவை என்ற முடிவுக்கு வரமுடியும். இப்படியானதொரு மோசமான நாடு தன்னை எப்படி மேற்கு நாடுகளுடன் அல்லது வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிட முடியும்? இவ்வளவு குற்றங்களையும், சீர்கேடுகளையும் கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாக இறுகப் பற்றிக்கொண்டு, தன்னை இரண்டாம் தரமாகப் பார்த்துவிட்டீர்களே என எப்படி கோபப்பட முடியும்?

• • •

### தமிழர்களை ... தொடர்ச்சி ...

விளங்குகின்றன. *1912* ம் ஆண்டு சட்டம் ஒரு வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் முறையான பராமரிப்பு, போஷாக்கு என்பவற்றிற்கு தோட்ட முகாமையாளரே பொறுப்பு என்பதனை வலியுறுத்தியது.

தோட்டங்களில் காணப்படும் சுகாதார வசதிகளையும், தோட்ட மக்களுக்கான சமூக நலன் வசதிகளையும் அரசாங்க மாவட்ட வைத்திய அதிகாரிகள் மேற்பார்வை செய்வதற்கும் இச்சட்டம் இடமளித்தது. மேலும் தோட்டங்களில் மலசல கூடங்களை அமைப்பதற்கும், வடிகால் அமைப்புக்களை திருத்துவதற்குமான சட்டவிதிகளை உருவாக்குவதற்கும் இச்சட்டம் அனுமதி வழங்கியது. *1941* ம் ஆண்டு பிரசவ நன்மைகள் சட்டம் தொழிலாளர் நலன்பேணும் மற்றொரு சட்டமாக விளங்குகின்றது.

ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் பல்வேறு சமூகநலன் திட்டங்களை அவ்வப்போது நாட்டு மக்களுக்கு வழங்கிவந்த போதும் தோட்ட மக்களால் இந்த நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியாதவொரு நிலையே காணப்பட்டது. சுகாதாரம், மருத்துவம் மற்றும் கல்வி உள்ளிட்ட பல வேலைத்திட்டங்களும் இதில் உள்ளடங்கும்.

சமகாலத்திலும் கூட இந்த நிலைமையினை எம்மால் அவதானிக்க முடிகின்றது. தோட்டமக்கள் தொடர்ச்சியாக தோட்ட முகாமைத்துவத்தின் பிடிக்குள் சிக்குண்டு தங்கியிருக்கும் நிலையில் அவர்களின் நலன்கள் பலவும் மழுங்கடிப்பிற்கு உள்ளாகும் நிலையே மேலெழுந்து காணப்படுகின்றது. இதேவேளை தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டதன் பின்னர் தோட்ட மக்களுக்கு சமூகநலன் சேவைகளை வழங்குவதில் ஓரளவு அக்கறை காணப்பட்டதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இதேவேளை தோட்டப்புற வைத்தியசாலைகளை எடுத்துக் கொண்டால் அது தொழிலாளர்களின் சுகாதார மேம்பாட்டிற்கு கை கொடுக்கும் ஒன்றாக காணப்படவில்லை. பயிற்சிபெற்ற வைத்தியர்கள், தேவையான மருந்து வகைகள், நோயாளர்களுக்கான ஏனைய வசதிகள் என்பன இங்கு பெரும்பாலும் இல்லாத ஒரு நிலைமையே காணப்படுகிறது.

பல தோட்டங்களில் வைத்தியசாலைகள் பெயரளவிலேயே இயங்கிவரும் நிலையில் தொழிலாளர்களின் துன்பம் இரட்டிப்பாகியுள்ளது. கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களில் தொழிலாளர்களின் நிலைமைகள் மிகவும் மோசமாகியுள்ளன. இங்குள்ள தோட்டப்புற வைத்தியசாலைகள் உரிய வசதியின்றி காணப்படுவதால் நோயாளர்களை சிகிச்சைக்காக நகர்ப்புற வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது.

எனினும் நகர்ப்புற வைத்தியசாலைகள் தொலைதூரத்தில் இருப்பதனாலும், பாதைச் சீர்கேடு உள்ளிட்ட பல காரணங்களினாலும் நகர்ப்புற வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களை அழைத்துச் செல்வது இலகுவான காரியமாக தென்படவில்லை. இந்நிலையில் பல தோட்டங்களில் நோயாளர்களை அழைத்துச் செல்வதற்கான அம்பியூலன்ஸ் வண்டி வசதிகள் காணப்படாமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை பெருந்தோட்ட வைத்தியசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் வேலைத்திட்டம் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்டது. தொழிலாளர்களுக்கு சுகாதார மற்றும் மருத்துவ தேவைகளை உரியவாறு பெற்றுக் கொடுப்பது இதன் நோக்கமாக இருந்தது.

எனினும் இந்நடவடிக்கை முழுமைபெறாது சில வைத்தியசாலைகளை மட்டுமே அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. இந்நிலையில் நாட்டின் ஏனைய பிரதேசங்களைப் போன்று பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள தோட்ட வைத்தியசாலைகள் அனைத்தும் அரசாங்கத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட வேண்டியதன் அவசியத்தை பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் அண்மையில் பாராளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

பெருந்தோட்டப் பகுதிகளில் சுமார் *500* வைத்தியசாலைகள் காணப்படுகின்றன. அதில் *44* வைத்தியசாலைகளை மாத்திரமே அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. கடந்த வருடத்தில் *59* வைத்தியசாலைகளுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்தும் இன்னும் அரசாங்கம் பொறுப்பேற்காதுள்ளது. இன்னும் தோட்ட மருத்துவ உதவியாளர்களிடமே தொழிலாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதனால் ஏனைய பிரதேசங்களைப் போன்று தோட்ட வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்து எம்.பி.பி.எஸ் வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்றும் இராதாகிருஸ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இக்கோரிக்கை வரவேற்கத்தக்கதாகும். இந்நிலையில் தோட்டப்புற வைத்தியசாலைகளை அரசாங்கம் உடனடியாக பொறுப்பேற்று சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ சேவைகளை தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும். அத்தோடு இம்மக்களை தொடர்ந்தும் 'மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் "நோக்குவதை அரசாங்கம் தவிர்ப்பதும் மிகவும் அவசியமாகும். இல்லையேல் பாதக விளைவுகளுக்கு அது அடித்தளமாகும்.

• • •

### சமூக ஊடக ... தொடர்ச்சி ...

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி அரசுக்கு எதிராக மக்கள் கருத்தைத் திரட்டலாம். அதனால், பொதுக் கருத்தைக் கட்டுப்படுத்தவும், கருத்து வேறுபாடுகளைத் தடுக்கவும், சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது அரசுக்குத் தேவையாகவுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரமின்மை உட்பட பல சவால்களை எதிர்கொண்டுள்ளார். அவர் தனது சொந்த அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி தனக்கு எதிராக அணிதிரட்டுவதைத் தடுக்கவும் அவர் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறார்.

சமூக ஊடகங்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த அல்லது கட்டுப்படுத்தும் விக்கிரமசிங்கவின் முயற்சிகள் நியாயமானதா இல்லையா என்பதில் ஒருமித்த கருத்து இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தவறான தகவல்கள் பரவுவதைத் தடுக்கவும், தேசிய பாதுகாப்பைப் பாதுகாக்கவும் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்று சிலர் நம்புகிறார்கள். மற்றவர்கள் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது பேச்சு சுதந்திரத்தை மீறுவதாகவும், மாற்றுக் கருத்துக்களை அடக்குவதற்குப் பயன்படுத்தப்படலாம் என்றும் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

சமூக ஊடகப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி முன்னெடுத்துள்ள முயற்சிகள் வெற்றியளிக்குமா இல்லையா என்பதை உடனடியாகச் சொல்லமுடியாது. ஆனால், இலங்கையில் சமூக ஊடகங்களால் ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கம் குறித்து விக்கிரமசிங்க கவலை கொண்டுள்ளார் என்பது மட்டும் தெளிவாகிறது.

கடந்த வருடம் கோட்டாபயவுக்கு எதிராக நடைபெற்ற "கோட்டா கோ கம" போராட்டம் துரிதமாக மக்கள் ஆதரவைப் பெற்று வெற்றி பெற்றமைக்கு சமூக ஊடகங்களின் பங்களிப்பு முக்கியமானது. அரபு நாடுகளில் "அரபு வசந்தம்" என்ற பெயரிலான மக்கள் போராட்டங்கள் பெற்ற வெற்றியின் பின்னணியிலும் சமூக ஊடகங்கள் முக்கிய பங்காற்றியுள்ளன. இவை அனைத்தும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரியும்.

இலங்கை இப்போது அமைதியாக இருப்பது போல தோன்றினாலும், நிலைமை நீறுபுத்த நெருப்பாகத்தான் உள்ளது என்பதும் ரணிலுக்கு மட்டுமன்றி, ஆட்சியிலுள்ள அனைவருக்கும் தெரியும். அதனை மீண்டும் எரியச் செய்வதற்கான வல்லமை சமூக ஊடகங்களுக்கு இருக்கின்றது என்பது அண்மைக்கால வரலாறு.

மீண்டும் ஒரு முறை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக வர வேண்டும் என்ற இலக்குடன் செயற்படும் ரணிலுக்கு சமூக ஊடகங்கள் மூலமாக வரக்கூடிய இந்தத் தடைகளைத் தகர்க்க வேண்டிய "தேவை" நிச்சயமாக உள்ளது. அதனைவிட, மற்றொரு "அரகலய" உருவாகிவிடலாம் என்ற அச்சமும் அவருக்குள்ளது. கோட்டாபயவுக்கு எதிராக கிளர்ச்சி வெடித்த போது, அதற்கு உறுதுணையாக இருந்த காரணிகளை இல்லாமல் செய்வதும் ரணிலைப் பொறுத்தவரை ஒரு தற்காப்பு நடவடிக்கைதான்!

• • •

### ஈழத் தமிழின ... தொடர்ச்சி ...

- பௌதீக பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதனைக் கணக்கிலெடுத்து அக்குழுவின் சாதாரண வாழ்வியலுக்குள் திட்டமிட்டே ஊடுறுத்தல்.
- அக்குழுவின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்திவிடும் உள்நோக்கம் கொண்டு தடுப்புக்களை பிரயோகித்தல்.
- அவ்வினத்தின் குழந்தைகளை அவர்களின் விருப்பம் இன்றியே மற்றொரு இனத்தவரிடம் கையளித்தல்.

ஆகியனவே இனப்படுகொலை என வரையறுத்தது.

பன்னாட்டுச்சட்டத்தினுள் உள்வாங்கப்பட்டதும், *2007* ஆம் ஆண்டில் தனது தீர்ப்பை வெளிப்படுத்தியதுமான ருவாண்டாவிற்கான பன்னாட்டுக் குற்றவியல் தீர்ப்பாயம் பின்வரும் நடவடிக்கைகள் யாவும் தண்டனைக்குரியவை என சட்டமாக்கியுள்ளது.

***1. இனப்படுகொலை.***

***2. இனப்படுகொலைக்கான சதியாலோசனை.***

***3. இனப்படுகொலையை நிகழ்த்துவதற்கு வெளிப்படையாகவும் நேரடியாகவும் தூண்டுதல்.***

***4. இனப்படுகொலையை நிகழ்த்த முயற்சித்தல்.***

***5. இனப்படுகொலை நிகழ்த்துவதை நோக்கமாகக்கொண்டு சட்ட விரோதமாக கூடுதல்.***

இனப்படுகொலை தொடர்பான பன்னாட்டு நடைமுறைவரைபின் படி "உள்நோக்கம்" என்பதை நிரூபிப்பது மிகச்சிக்கலானது என்னும் வாதம் பொதுவாக முன்வைக்கப்படுகின்றது. நிரூபிப்பதற்குச் சிக்கலான இந்த விடயத்தை வரையறுத்துக்கொள்வது எவ்வாறு என்பது பொதுவான கேள்வியாக அமைகின்றது.

இனப்படுகொலைக்கான உள்நோக்கம் இருந்தது என்பதை நிரூபிப்பதற்கு எவற்றை நாம் கைக்கொள்ள வேண்டும் என்பதை அடுத்தவாரம் பாரப்போமா?

**தொடரும்**

## இந்திய, சீன ... தொடர்ச்சி ...

விமானமும் தரையிறங்கவில்லை. செங்டு என்ற இடத்தில் இருந்து சீன அதிகாரிகளையும் சீன உல்லாசப்பயணிகளையும் சுமந்து வந்த ஒரு பட்டய விமானம் (Chartered flight) மட்டுமே அங்கு இதுவரை தரையிறங்கியிருக்கிறது.

கௌதம் புத்தர் மற்றும் போக்காறா ஆகிய இரு விமானநிலையங்களையும் இணைத்துப் பார்த்தால் தினசரி 80-85 தடவைகள் உள்நாட்டு விமானங்கள் அங்கு தரையிறங்குகின்றன. அந்த முனையங்கள் தொடர்ந்து இயங்க வேண்டுமாக இருந்தால் போதியளவுக்கு விமானப்பயணங்கள் அங்கு இடம்பெறுவது அவசியம் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

"புத்தரின் பிறப்பிடமாகக் கருதப்படும் லும்பினி, நேபாளத்தில் உல்லாசப்பயணிகள் மிக அதிகமாக வருகை தரும் ஒரு இடமாகும். உள்நாட்டுப் பயணங்களை மட்டும் இந்த இரு விமானநிலையங்களும் கையாளுமாக இருந்தால், இந்த விமானநிலையத்தைத் தொடர்ந்தும் இயக்குவது சாத்தியமில்லாமல் போகலாம். பன்னாட்டு விமானப்பயணங்கள் ஒழுங்குக்கிரமமாக நடைபெறாது போனால், பெற்றுக்கொண்ட கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போகலாம்" என்று நேபாளத்தின் குடிமக்கள் விமானப்பயண அதிகாரசபையின் மேனாள் இயக்குநரான திரி ரத்னா மனந்தர் (Tri Ratna Manandhar) தெரிவித்தார்.

நேபாளத்தில் தரையிறங்கக்கூடிய வர்த்தக ரீதியிலான விமானப்பயணங்களுக்கு தனது வான்வெளியைத் திறந்துவிட இந்தியாவுடன் உரியமுறையில் இராஜீக ரீதியிலான முன்னெடுப்புகளை நேபாளம் மேற்கொள்ள வேண்டும் என்று போக்காறா பன்னாட்டு விமானநிலையத்தின் அதிபரான பிக்ரம் ராஜ் கௌதம் தெரிவிக்கிறார். மேற்கில் இருந்து வரும் விமானங்களுக்கு டெல்லி அனுமதி அளிக்காத பட்சத்தில், தாய்லாந்து, ஜப்பான், கம்போடியா போன்ற கீழைத்தேசங்களிலிருந்து உல்லாசப்பயணிகளின் வருகையை ஊக்குவிக்கலாம் என்ற கருத்தையும் நிபுணர்கள் முன்வைக்கிறார்கள்.

"பைரவா விமானநிலையத்திலிருந்து கோலாலம்பூருக்குச் செல்லும் வாராந்த விமானப்பயணம் ஒன்றை நேபாளம் தற்போது ஆரம்பித்திருக்கிறது. ஏனைய விமான நிறுவனங்களுக்கு இது ஒரு நேர்முகமான செய்தியைக் கொடுக்க வேண்டும்" என்று கௌதம புத்தர் பன்னாட்டு விமானநிலையத்தின் இயக்குநரான தீபக் பச்ராச்சாரிய (Dipak Bajracharya) பிபிசிக்குத் தெரிவித்தார்.

"இது எவ்வாறிருப்பினும் டெல்லியுடன் விரைவில் ஒரு நல்ல தீர்வுக்கு வரும் வாய்ப்பு இருக்கிறது" என்று நேபாளத்தின் உல்லாசப்பயணத் துறை அமைச்சரான சூடன் கிராந்தி தெரிவித்தார்.

இந்திய இராஜதந்திரிகளுடனும் அதிகாரிகளுடனும் நாங்கள் தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறோம். அதற்கான நேர்முகமான சமிக்ஞைகள் தென்படுகின்றன என்று அவர் மேலும் பிபிசிக்குத் தெரிவித்தார்.

**நன்றி: பிபிசி**

## தனது சிங்கள ... தொடர்ச்சி ...

எழுப்பியதும் சர்வதேசத்திற்கு பதில் சொல்லாமல் இவருடைய பதில் என்பது எதிர் மறையாக அதில் இருந்து தப்பித்து கொள்வதற்காகவே எதிர் மறையாக அவருடைய கருத்து இருந்தது ஆகவே என்னை பொறுத்தவரையில் சிலர் கூறுவார் ரணில் விக்கிரமசிங்க என்பவர் ஒரு இனவாதம் பிடித்தவர் என்று கூற நான் அறிந்திருக்கிறேன் அதனை ஜேர்மன் ஊடகத்துக்கு அழித்த பேட்டியில் நேரடியாக அது உண்மை என்று கருதுகிறேன்

• • •

## யாழில் ஆரம்ப... தொடர்ச்சி ...

பொறுப்பாளரும் முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினருமாகிய மகேந்திரன் மயூரன் யாழ்.மாவட்ட தாச்சி சங்க தலைவர் எ.வி. ஜெயவிந்தன், செயலாளர் சீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தமிழர்களின் பாரம்பரியத்தினை எடுத்தியம்பும் இச் சுற்றுப்போட்டிக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் இலண்டன் வாழ் ஈழத்தமிழருமாகிய குருபரன் (குரு) அவர்கள் நிதி அனுசரணை வழங்குகின்றார்.

ஆரம்ப போட்டியில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்கள் பங்குபற்றியிருந்தன. போட்டியில் நவாலி தென்றல் விள்ளாயட்டுக் கழகம் 4 புள்ளிகளையும் சுதுமலை புவனேஸ்ரி அம்பாள் விளையாட்டுக் கழகம் 3 புள்ளிகளையும் பெற்றதமைக்கு அமைய நவாலி தென்றல் விள்ளாட்டுக் கழகம் வெற்றியினை தனதாக்கிக் கொண்டது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தினமும் இரவு 7.30 மணிக்கு இச் சுற்றுபோட்டிக்கான போட்டிகள் ஆரம்பமாகும். அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்

## சிங்கப்பூரில்... தொடர்ச்சி ...

சிங்கப்பூர் டெலர்களாகும் இது அமெரிக்காவில் கார்கள் விற்பனை செய்யப்படும் விலையை விட ஆறு மடங்கு அதிகமாகும். அதாவது அங்கு கார் வைத்திருப்பது மிகவும் செலவீனமானது. சாதாரண சிங்கப் பூர் தொழிலாளரின் சம்பளம் ஆண்டுக்கு 70,000 சிங்கப்பூர் டெலர்களாகும்.

5.5 மில்லியன் மக்கள் தொகை கொண்ட அந்த நாட்டில் 1 மில்லியன் கார்களே உள்ளன. பழைய கார்கள் அகற்றப்படும் எண்ணிக்கைக்கு ஏற்பவே புதிய கார்கள் அங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன.

## கிண்ணியாவில் ... தொடர்ச்சி ...

செல்கின்றார்கள் என்ற சந்தேகம் பரவலாக மக்களை பீதிக்குள்ளாக்கியது.

உடனடியாக களத்திற்கு சென்ற நான் போலீசாருக்கும் அறிவித்ததோடு 119 எனும் அவசர போலீஸ் முறைப்பாடு சேவைக்கும் அறிவித்ததோடு பிரதேச செயலா ளர், கிராம உத்தியோகத்தர், சூரங்கல் இராணுவ முகாம் போன்றவற்றிற்கும் தகவல்களை வழங்கி அவர்களின் உண்மையான நோக்கம் என்ன என்பதை எனக்கு அறிய தாருங்கள் என கேட்டுக் கொண்டேன் என மஹ்தியின் தெரிவித்துள்ளார்.

நாடெங்கிலும் சிறுபான்மை சமூகம் வாழுகின்ற இடங்களில் நடைபெறுகின்ற செயற்பாடுகள் போன்று அல்லது கடந்த கால அனுபவங்கள் போன்று இக்கிண்ணியாவிலும் ஒரு பதற்றமான சூழ்நிலை உருவாகி விடக்கூடாது என்பதற்காக இந் நடவடிக்கை என்னால் எடுக்கப்பட்டது என மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில் ... தொடர்ச்சி ...

தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் 36 மணி நேரத்தில் 11 யானைகள் கொல்லப்பட்டிருந்தன. கடந்த மாதம் 27 ஆம் நாள் கொழும்பில் இருந்து காங்கேசன் துறை நோக்கி சென்ற தொடரூந்து மோதியதால் 4 யானைகள் கொல்லப்பட்டன, அதன் பின்னர் மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற தொடரூந்து மோதிய தால் 2 யானைகள் கொல்லப்பட்டன.

அதேசமயம் இந்த வருடத்தில் 67 யானைகள் துப்பாக்கி சூட்டு சம்பவங்கள், சட்டவிரோதமான மின்சார கம்பிகளில் சிக்கி மற்றும் பொறிகளில் சிக்கி உயிரிழந்துள்ளன. பல யானைகள் துன்புறுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாக இலங்கை அமைச்சர் தெரிவித்துள்ளார். அதிகளவான யானைகள் அனுராதபுரத்தில் கொல்லப்பட்டுள்ளன. இந்தவருடம் ஏப்பிரல் மாதம் வரையிலும் 34 யானைகள் அங்கு கொல்லப்பட்டுள்ளன.

எனினும் இந்த விபத்துக்களை தடுத்து யானைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எதனையும் இதுவரை எடுக்கவில்லை.

## இளவயதினர் ... தொடர்ச்சி ...

இறக்கின்றனர். புற்றுநோயாளிகளில் நான்கில் ஒருவர் புகைப்பிடிப்பவராகவே இருக்கின்றார்கள் நோயாளிகளை பராமரிப்பதற்கு பல மில்லியன் பவுண்ஸ்களும் செலவிடப்படுவதாக பிரித்தானியா அரசு தெரிவித்துள்ளது.

## பிரித்தானியாவில் ... தொடர்ச்சி ...

பிரித்தானியா அரசு இரண்டு தடவைகள் ஓய்வூதிய வயதை அதிகரித்துள்ளது. கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து பிரித்தானியாவில் கொன்சவேட் டிவ் கட்சி ஆட்சியில் உள்ளது. அதன் ஆண்டுக்கான செலவீனங்கள் தற்போது என்றுமில்லாதவாறு அதிகரித்து செல்கின்றது.

சுகாதாரம், ஓய்வூதியம், சமூக நலன் தொடர்பான செலவீனங்கள் இந்த வருடம் 784 பில்லியன் பவுண்ஸ்களாக அதிகரித்துள்ளது. இது கடந்த வருடம் 713 பில்லியன் பவுண்ஸ்களாக இருந்தது. அரசின் கடனும் 2010 ஆம் ஆண்டு அதன் மொத்த உற்பத்தியில் 75 விகிதமாக இருந்தது தற்போது அது 100.5 விகிதமாக அதிகரித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு வரையில் ஓய்வூதிய வயது ஆண்களுக்கு 65 ஆகவும், பெண்களுக்கு 60 ஆகவும் இருந்தது. பின்னர் இரு தரப்பினருக்கும் 65 வயதாக 2018 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் அது 66 ஆக 2020 ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது. 2028 ஆம் ஆண்டு அது 67 ஆகவும், 2048 ஆம் ஆண்டு அது 68 ஆகவும் உயர்த்தப்படவுள்ளது.

## இனவாதிகளின் ... தொடர்ச்சி ...

வெளிப்புற செல்வாக்கு மற்றும் அச்சுறுத்தல் இல்லாமல், சட்டம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் தீர்ப்புகளை வழங்குவது நீதிபதிகளின் திறனைப் பொறுத்தது. அநத வகையில் சரவணராஜா பல துணிச்சலான தீர்ப்புகளை வழங்கியுள்ளார்.

நீதியரசர் சரவணராஜாவிற்கு ஏற்பட்ட அவல நிலை என்பது இலங்கையில் நீதித்துறையின் சுதந்திரம் சீர்குலைந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.அந்தவகையில் இலங்கைநீதி தேவதையை தலைகுனிய வைத்த ஒரு தோல்வியுற்ற அரசாக அடையாளப்படுகிறது. இலங்கையில் தமிழர்களுக்கு சமநீதி கிடைக்காது என்பதை இது நிரூபித்து நிற்பதோடு ஈழத்தமிழர்களுக்கு இலங்கைத்தீவில் பாதுகாப்பு இல்லை என்பதை யும் உலகிற்கு எடுத்துக்காட்டுகின்றது. பில்லியன் கணக்கான பொருளாதார உதவிகள் மூலம் தோல்வியுற்ற அரசுக்கு முட்டுக்கட்டை போட முயற்சிப்பவர்கள் கள யதார்த்தத்தை தீவிரமாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

நீதிபதி சரவணராஜாவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதை அனைத்துலக ஈழத்தமிழர் மக்கவை வன்மையாகக் கண்டிப்பதோடு, இலங்கையை பிணையெடுக்க முயற்சிக்கும் நாடுகள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

**ஸ்டீவன் புஸ்பராஜா க.**
**-அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை-**